பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 28 செவ்வாய்க்கிழமை (13.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 17

## நோர்வேயின் பணி நீடிப்பது குறித்து முடிவு வராமல் பேச்சு ஏதும் இல்லை

### அதுவரை இழுபறி நிலையே நீடிக்கும்

கொழும்பு,டிசெ.13

யுத்தநிறுத்த உடன்பாடு குறித்து இலங்கை அரசுத் தரப்பும் விடுதலைப்புலிகள் தரப்பும் விரும்பினால் ஜப்பானில் நேரில் சந்தித்துப் பேசமுடியும் என்ற யோசனை தற்போது முன்வைக்கப்பட்டிருந்தாலும் -

அமைதி முயற்சிகளில் தனது அனுசரணைப் பணியைத் தொடர்வது குறித்துத் திட்டவட்டமான முடிவை நோர்வே எடுக்கும்வரை அத்தகைய பேச்சு ஏதும் நடைபெறுவதற்கு இடமேயில்லை என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் அடித்துக் கூறிவிட்டன.

நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்பு மீள உறுதிப்படுத்தப்படும் வரை அமைதி முயற்சிகள் தொடர்பான தற்போதைய இழுபறி நிலை நீடிப்பது தவிர்க்க முடியாதது என்றும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் பாருக் வவுனியாவில் கடத்தல்

வவுனியா,டிசெ.13

'புளொட்' இயக்கத்தின் முக்கியஸ்தரும், மத்திய குழு உறுப்பினருமான பாருக் என அழைக்கப்படும் சின்னத்தம்பி கணேசலிங்கம் என்பவர் நேற்றுமுற்பகல் வவுனியாவில் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

வவுனியா சிதம்பரபுரத்திற்கும் சமனங்குளத்திற்கும் இடையில் மோட்டார் சைக்கிளில் இவர் சென்றுகொண்டிருந்தபோது வானொன்றில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# டக்ளஸ், அதாவுல்லாவுக்கு கருணா குழுவுடன் தொடர்பு

## அந்த அணியில் இருந்து தப்பிவந்தோர் நேற்று கரடியனாறில் வைத்துப் பேட்டி

மட்டக்களப்பு,டிசெம்பர்13

★அரச படைகளின் புலனாய்வுப் பிரிவினருடன் ஒட்டுப்படையாகச் சேர்ந்து இயங்கும் கருணா குழுவினரோடு அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, அதாவுல்லா ஆகியோருக்கு நேரடியாகத் தொடர்பு உண்டு.

★புலிகள் இயக்கத்தைவிட்டுத் தப்பி ஓடிய கருணா இப்போது இந்தியாவிலிருந்து இயங்குகின்றார்.

- இப்படி அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டிருக்கின்றனர் கருணா குழுவிலிருந்து தப்பி ஓடிப் புலிகளிடம் சரணடைந்திருக்கும் இருவர்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு கரடியனாறில் தேனகம் மண்டபத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இத்தகவல்களை அவர்கள் வெளியிட்டனர்.

கடந்த வியாழக்கிழமை கருணா குழுவின் முக்கிய நபரான இனியபாரதி மற்றும் புலித்தேவன் என்பவர்கள் உட்பட நான்கு பேர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு கருணா குழுவின் இரண்டு உறுப்பினர்கள் புலிகளிடம் சரணடைந்தனர் என்பது தெரிந்ததே.

புகழ்வேந்தன், ஞானதீபன் ஆகிய இரு (16 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் கிரனேட் வீச்சு!

ஏறாவூர்,டிசெ.13

வாழைச்சேனை பேத்தாழை பஸ் நிலையத்துக்கு அருகில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று நண்பகல் 12.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலின்போது இளம் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

எஸ்.உதயகுமார் (வயது- 38) என்ப (16 ஆம் பக்கம் பார்க்க)

## கறுவாக்கேணியில் மோதல்: சிறுவன் படுகாயம்

ஏறாவூர்,டிசெ.13

வாழைச்சேனை கறுவாக்கேணிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் கைக்குண்டுத்தாக்குதலின்போது மூன்றரை வயதுச் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான் என வாழைச்சேனைப் பொலீஸார் (16 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் கச்சேரியடியில் நேற்று சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

வீதிக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவருடன் கடமையில் ஈடுபட்டிருந்த மற்றுமொரு இராணுவச் சிப்பாய் காலில் காயமடைந்தார்.

நேற்றுமுற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் உள்ள கச்சேரி, பஸ்ரியன் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இராணுவச் சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்த சம்பவத்தையடுத்து அப்பகுதியில் இருந்த மக்கள் பதற்றம் காரணமாக நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இச்சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் கூடிய இராணுவத்தினர் காயமடைந்த இராணுவச் சிப்பாயை அப்பகுதியில் உள்ள காவலரணுக்குள் தூக்கிச் சென்றனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கிரனேட் வீச்சு 20 பொலீஸார் காயம்

### நேற்றிரவு சம்பவம்

மன்னார்,டிசெ.13

மன்னார் பேசாலையில் நேற்றிரவு 7.20 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 20 பொலீஸார் காயமடைந்தனர்.

பேசாலைப் பொலீஸ் நிலையத்துக்குச் சமீபமாக பொலீஸாருக்கு சப் இன்ஸ்பெக்டர் வகுப்பு நடத்திக்கொண்டிருந்தார் - என்றும் அச்சமயம் அங்கு இரு கிரனேட்டுக்கள் அடுத்தடுத்து வீசப்பட்டன என்றும் - தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் சிக்கிக்காயமடைந்த பொலீஸார் மன்னார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து மன்னார் பேசாலைப் பகுதியில் நேற்று பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது. (3 - 13)

## மட்டு. தளவாயில் தேடுதல்; குண்டு மீட்பு

செங்கலடி,டிசெ.13

மட்டக்களப்பு மாவட்டத்தின் தளவாய் கிராமத்தில் நேற்று திங்கட்கிழமை காலை சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து இத்தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

காலை 7.30 மணி தொடக்கம் பகல் 11.30 மணிவரை தேடுதல் நடவடிக்கைகள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலையில் கிளைமோர்த் தாக்குதல்

செங்கலடி,டிசெ.13

மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலை கிராமத்தில் நேற்று இடம்பெற்ற கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவச் சிப்பாய்கள் இருவர் காயமுற்றனர் என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

சமன் குலரத்ன, பீ.எச்.ஜே. அப்புஹாமி என்ற இரு இராணுவச் சிப்பாய்களே காய (16 ஆம் பக்கம் பார்க்க)

## முன் நிபந்தனை விதிக்க முடியாது நோர்வேக்கு இலங்கை தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.13

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையிலான அமைதிப் பேச்சுகளை முன்னெடுப்பதற்காக நோர்வே அனுசரணையாளர்கள் நிபந்தனைகள் எதனையும் விதிக்க முடியாதென்று அரசாங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற பேச்சின்போது கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கு இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு நோர்வேத் தரப்பு நிபந்தனை விதிக்க முடியாது!

### ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, டிச.13

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அமைதிப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், இது விடயத்தில் அனுசரணையாளராகச் செயல்படும் நோர்வே நிபந்தனைகளை முன்வைப்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என ஜே.வி.பி. நேற்றுத் தெரிவித்திருக்கிறது.

நேற்று 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சந்திரசேன விஜேசிங்க, அமைதி முயற்சிகளின் அனுசரணைத் தரப்பு இவ்வாறு நிபந்தனை (16 ஆம் பக்கம் பார்க்க)

## தலைநகரில் வீதிகள் மறிப்பு

கொழும்பு,டிசெ.13

ஐ.நா. சபையின் ஐம்பதாவது வருடாந்த வைபவம் இடம் பெறுவதையொட்டி இன்று கொழும்பில் சில பிரதான வீதிகள் பிற்பகல் 2 மணிமுதல் 6 மணிவரை - சில மணிநேரங்கள் - தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் எனக் கொழும்பு போக்குவரத்துப் பொலிஸார் (16 ஆம் பக்கம் பார்க்க)

## 22 தமிழ் இளைஞர் சிலாபத்தில் கைது

கொழும்பு,டிசெ.13

தமிழ் மக்கள் செறிந்து வாழும் சிலாபம் உடப்பு பிரதேசத்தில் கடந்த 8 ஆம் திகதியன்று இரவு பொலீஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது சுமார் 100 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் 22 தமிழ் இளைஞர்கள் விசாரணைகளின் பின்னர் சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (த-206)

# குடாநாட்டில் வெள்ளத்தினால் 4 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

## மேலதிக அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.13

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த சனிக்கிழமை பெய்த காற்றுடன் கூடிய கடும் மழை காரணமாக வீடுகள் மற்றும் பயிர்கள் என்பன சேதமடைந்தவர்களின் விவரங்களை சேகரிக்கும் பணியில் யாழ்.மாவட்ட செயலகம் ஈடுபட்டுள்ளது.

யாழ்.செயலகத்தில் நேற்றுவரை கிடைத்த தகவலின் படி 10 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 13 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் -

இவர்களில் ஆயிரத்து 800 குடும்பங்கள் பொது இடங்களிலும் ஆயிரத்து 600 குடும்பங்கள் நண்பர்களது வீடுகளிலும் தங்கியுள்ளனர் என்றும் - யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார்.

பிரதேச செயலர் ரீதியாக நல்லூரில் 458 குடும்பங்களும் -

ஊர்காவற்றுறையில் 78 குடும்பங்களும்-

காரைநகரில் 429 குடும்பங்களும் -

பருத்தித்துறையில் 2 ஆயிரத்து 44 குடும்பங்களும் -

தெல்லிப்பளையில் 92 குடும்பங்களும் -

கரவெட்டியில் 262 குடும்பங்களும் -

சண்டிலிப்பாயில் 87 குடும்பங்களும் -

கோப்பாயில் 110 குடும்பங்களும் -

உடுவிலில் 117 குடும்பங்களும் -

யாழ்ப்பாணத்தில் 336 குடும்பங்களும் - பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்தந்தப் பிரதேச செயலகங்கள் ரீதியாக சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் இதுவரை தெரியவரவில்லை - இப்படி மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

உடனடி உதவிகள் தற்போது வழங்கப்படும். ஏனைய - சேதவிவரங்கள் சேகரிக்கப்பட்ட பின் அவற்றுக்கான உதவிகள் பின்னர் வழங்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (3-203-204)

## இலங்கை வங்கி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.13

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் ஆளணி உதவியாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன:

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை "ஆளணி முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி), இலங்கை வங்கி, ஆளணிப் பகுதி, 2 ஆம் தளம் தலைமைத்துவக் கட்டடம் 04, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-204)

# பதிவாளர் பணிமனை பணிகள் தென்மராட்சிக்கும் விஸ்தரிப்பு

## நாளை முதல் அங்கே சான்றிதழ்கள் பெறவசதி

யாழ்ப்பாணம்,டிசெ.13

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கான பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ் வழங்கும் பிரிவு தென்மராட்சி செயலகத்தில் நாளைமுதல் செயற்படவிருக்கின்றது.

பதிவாளர் பணிமனைப் பணிகளைப் பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்துக்கான பணிகளும் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட காணிப் பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமான ப.பிரபாகர் இவ்விடயம் தொடர்பாக தெரிவித்ததாவது:-

இப்பிரதேச செயலகத்துக்கு உட்பட்டவர்கள் இதுவரை காலமும் தமக்கு தேவையான காலங்கடந்த இறப்பு, பிறப்பு, பதிவுகள் சான்றிதழ்கள் பெறுதல், பெயர் மாற்றங்கள் என்பவற்றை யாழ்.செயலகத்திலேயே மேற்கொண்டு வந்தனர்.

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ், வரணி, கச்சாய், சாவகச்சேரி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களின் பதிவாளர் பிரிவுக்குட்பட்டவர்களின் இறப்பு, பிறப்பு விவாகப் பத்திரங்களுக்கு உரிய பதிவேடுகள் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் கடந்த சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிக்குட்பட்ட மக்கள், தமக்கு தேவையான இறப்பு, பிறப்புப் பத்திரங்களைப் பெறவும், காலங்கடந்த இறப்பு, பிறப்பு பதிவுகள், பெயர் மாற்றங்கள் என்பவற்றைச் செய்வதற்கும் நாளை புதன்கிழமை தொடக்கம் பிரதேச செயலகத்துக்குச் செல்ல வேண்டும் - என்றார் அவர்.

இதேவேளை, சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய், தெல்லிப்பளைப் பிரதேச செயலகங்களுக்கு மேற்படி பணிகள் ஏற்கனவே விஸ்தரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(3-204-203)

# சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பம் ஏற்கும் பணி நாளைமுதல் நிறுத்தம்

இவ்வாண்டுக்கான இறுதிச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதல் மற்றும் பூர்த்திசெய்யப்பட்ட சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பங்களை கையேற்றல் ஆகிய செயற்பாடுகள் யாவும் நாளை புதன்கிழமை முதல் இடைநிறுத்தப்படுவதுடன் திணைக்களத்தின் ஏனைய செயற்பாடுகளும் எதிர் வரும் 23ஆம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்படவுள்ளது என மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

திணைக்களத்தின் சகல செயற்பாடுகளும் மீண்டும் வழமைபோல் ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பிக்கும் என்றும் -

எனினும் 2005 டிசெம்பர் மாதத்தில் எழுத்துப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை ஆகியவற்றுக்கு திகதி வழங்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அப்பரீட்சைகள் வழங்கப்பட்ட திகதிகளில் நடைபெறும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (3)

## இலங்கை நிலைமை குறித்து

# விசேட அறிக்கையை அகாஷி ஜப்பான் அரசுக்கு வழங்குவார்

கொழும்பு,டிசெ.13

இலங்கையின் அமைதி முயற்சிகள் மற்றும் இங்குள்ள நிலைமை குறித்து இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி ஜப்பானிய அரசுக்கு விசேட அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய தமது இலங்கை விஜயத்தின்போது கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த மற்றும் அரசியற் கட்சிகளின் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசிய யசூஷி அகாஷி கிழக்கு மாகாணத்திற்கும் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்த பின்னர் யசூஷி அகாஷி டோக்கியோவிற்குப் புறப்பட்டார். இலங்கை அமைதி முயற்சிகள் மற்றும் வடக்கு, கிழக்கில் ஏற்பட்டிருக்கும் வன்முறை நிலைமை ஆகியன குறித்து அவர் ஜப்பான் அரசுக்கு விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளாரென கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளில் ஜப்பானும் அங்கம் வகிப்பதால் இலங்கை அமைதி முயற்சிகளில் ஜப்பான் வழங்கவேண்டிய பங்களிப்பு தொடர்பிலும் யசூஷி அகாஷி இந்த அறிக்கையில் கோடிட்டுக் காட்டுவாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

# இரத்தம் அவசரம் தேவை

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவிற்கு அனைத்து வகையான இரத்தம் தேவைப்படுகின்றது என வைத்திய அதிகாரி ஆர்.சிவசங்கர் அறிவித்துள்ளார்.

இரத்த தானம் செய்ய விரும்புபவர்கள் உடனடியாக இரத்த வங்கிப் பிரிவினருடன் தொடர்புகொண்டு இரத்த தானம் வழங்கி நோயாளிகளுக்கு உதவுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (3-13)

# கும்ளே, பதான் வேகத்தில் சரிந்தது இலங்கை துடுப்பாட்டத்திலும் இந்தியாவே ஆதிக்கம்!



6 விக்கெட்டுக்களைச் சாய்த்த கும்ளே

புது டில்லி,டிசெ.13

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தனது இரண்டாவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடும் இந்திய அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 237 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னைய தினம் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்த ஜெஹான் முபாரக் 10 ஓட்டங்களுடனும், சமிந்த வாஸ் ஓட்டம் எதுவும் பெறாத நிலையிலும் நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

சமிந்த வாஸ் 2 ஓட்டங்களை மாத்திரம் பெற்று கும்ளேயின் பந்தில் ஹர்பஜன் சிங்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 7 விக்கெட் இழப்பிற்கு 200 என இருந்தது.

முரளிதரன் 09, மாலிங்க பண்டார 01, தில்ஹார பெர்னாண்டோ 0 எனும் சொற்ப ஓட்டங்களுடன் ஆடுகளத்தைவிட்டு வெளியேறினர்.

இறுதியில் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் அனில் கும்ளே 28 ஓவர்களில் 6 ஓட்டமற்ற ஓவர்களுடன் 72 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களைச் சரித்தார்.

இதன்படி இலங்கை அணியைவிட 60 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்தது இந்திய அணி.

வழமைக்கு மாறாக ஆரம்பத்துடுப்பாட்டத்திற்காக கௌதம் கம்பீர் - இர்பான் பதான் ஜோடி களமிறங்கியது.

ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டு சிறிது நேரத்தில் சமிந்த வாஸின் வேகத்தில் கம்பீர் 'எல்.பி.டபிள்யூ' முறையில் ஆட்டமிழந்தார். வாஸ் தனது 300 ஆவது விக்கெட்டாக இவரின் விக்கெட்டைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து களமிறங்கிய லக்ஷ்மன் 11 ஓட்டங்களுடன் வாஸின் பந்தில் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 2 விக்கெட் இழப்பிற்கு 42 எனும் இக்கட்டான நிலையில் இருந்தது.

அதற்குப் பின்னர் களம் புகுந்த சச்சின் டெண்டுல்கர் 16 ஓட்டங்களுடன் பண்டாரவின் பந்தில் 'எல்.பி.டபிள்யூ' ஆனார்.

4ஆவது விக்கெட்டுக்காக அணித் தலைவர் ராகுல் டிராவிட் களமிறங்கினார். இவர் பதானுடன் ஜோடி சேர்ந்து மிகச் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப் படுத்தினார். இதனால் இந்திய அணி மீண்டும் தலைதூக்கியது.

அதிரடியாகச் செயற்பட்ட பதான் 143 பந்துகளில் 2 சிக்ஸர், 10 பவுண்டரிகள் அடங்கலாக 93 ஓட்டங்களைப் பெற்றார். இவரின் விக்கெட் பெர்னாண்டோவின் பந்தில் சங்கக்கார பிடியெடுக்க சரிந்தது. அணி 4 விக்கெட் இழப்பிற்கு 178 எனும் சிறப்பான நிலைக்கு முன்னேறியது.

தொடர்ந்து சௌரவ் கங்குலி களமிறங்கினார். மறுமுனையில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்த ராவிட் 53 ஓட்டங்களுடன் துரதிஷ்டவசமாக 'ரன் அவுட்' ஆனார். அணி 5 விக்கெட் இழப்பிற்கு 190 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

6ஆவது விக்கெட்டுக்காக யுவராஜ் சிங் களமிறங்கினார். இவருடன் ஜோடி சேர்ந்த கங்குலி அந்த விக்கெட்டுக்காக வீழ்த்தப்படாத இணைப்பாட்டமாக 47 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

இறுதியில் இந்திய அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 237 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆடுகளத்தில் கங்குலி 22 ஓட்டங்களுடன், யுவராஜ் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் சமிந்த வாஸ் 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். பெர்னாண்டோ, பண்டார ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதன்படி இந்திய அணி 297 ஓட்டங்களால் இலங்கை அணியை விடவும் முன்னிலை வகிக்கின்றது. 5 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ளன. 4ஆம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.



300 ஆவது விக்கெட்டை வீழ்த்திய வாஸ்.

# வவுனியாவில் நேற்று கிளைமோர்த் தாக்குதல்

வவுனியா,டிசெ.13

வவுனியா வாரிக்குட்டியூர், பூவரசங்குளம் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் கிளைமோர் குண்டுத் தாக்குதல் ஒன்று இடம் பெற்று இருப்பதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் காவலரண் ஒன்றைக் குறிவைத்துத் தாக்குதல் இடம்பெற்று இருப்பதாகவும், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் காப்பரணில் யாரும் இல்லாததால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதனையடுத்து, நேற்று வவுனியாவில் படையினரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையில் பொலிஸாரும், இராணுவத்தினரும், விஷேட அதிரடிப்படையினரும் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் ஆயுதபாணிகளினால் கடத்தப்பட்டதை அடுத்தும், நேற்றுக் காலை வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியில் கிளைமோர் குண்டு தாக்குதல் இடம்பெற்றதை அடுத்துமே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. வீதியால் போய் வரும் வாகனங்களை மற்றும் மோட்டார் சைக்கிள்களை மறித்து படையினர் சோதனை செய்து வருகின்றனர். (க-3)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# விசாரணைக் குழுவின் பெயரால் அரங்கேறும் அபத்த நாடகம்

சமாதானத்தைக் குலைக்கும் வகையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இருவர் கொண்ட குழு ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது.

தென்னிலங்கை சிங்கள அரசின் தலைமையில் மாற்றம் ஏற்பட்டாலும் அதன் போக்கில் மாற்றம் ஏற்படவில்லை என்பதையே இந்த நியமனமும் எடுத்துக்காட்டுகின்றது.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கௌசல்யனும் ஏனைய போராளிகளும், மாமனிதர் சந்திரநேருவும் ஒட்டுப்படைகளினால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்தும் அதை ஒட்டி நிகழ்ந்த வன்முறைகள் குறித்தும் விசாரிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இதேபோன்ற ஓர் ஆணைக்குழுவை நியமித்திருந்தார்.

பெரும் பொருள், நேர விரயத்தோடு இந்த ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகள் நடைபெற்றதோடு சரி. அதற்கு மேல் இந்த விசாரணைகளினாலோ, அதன் பெறுபேறுகளினாலோ பலன் - பயன் - ஏதும் கிட்டவில்லை. கிழக்கில் நடந்த அந்தச் சம்பவங்களின் பின்னணியைக் கண்டறிய அரசு ஓர் ஆணைக்குழுவை நியமித்துத் தனது பொறுப்புணர்வை வெளிப்படுத்தியது என்று சர்வதேச சமூகத்தின் காதில் பூச்சுற்றியதோடு அந்த ஆணைக்குழு விவகாரமும் அதன் பெறுபேறும் அமுங்கிப் போயிற்று.

அது போன்றதொரு கண்துடைப்பு நாடகத்தின் அங்கமாகவே இப்போதைய ஆணைக்குழு நியமன விவகாரமும் அரங்கேறுகின்றது.

இத்தகைய ஆணைக்குழு நியமனங்கள், மேற்படி சம்பவங்கள் தொடர்பான விடயங்களின் பின்னணியைக் கண்டறிவதில் அரசுத் தலைமைக்கு உண்மையில் அதிக ஆர்வம் உண்டு என்ற படத்தை சர்வதேச மட்டத்தில் போட்டுக் காட்டுவதற்கு உதவக்கூடும். ஆனால், இத்தகைய சம்பவங்களின் மூலத்தை - அடியில் புதைந்து கிடக்கும் ஆழமான உண்மைகளின் பின்னணியை - இது போன்ற ஆணைக்குழு விசாரணைகள் மூலம் அம்பலப்படுத்தலாம் என்பது பகற்கனவே.

அதேசமயம், இத்தகைய வன்முறைகளின் பின்னணி என்னவென்பதை இனிமேல்தான் ஓர் ஆணைக்குழுவை நியமித்து, அதன் விசாரணை மூலமே கண்டறிய வேண்டும் என்ற கணக்கில் அரசுத் தரப்பு வேடம் போடுவதும் சுத்த அபத்தமாகும்.

வடக்கு - கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - பலம் பெற்றிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் பலத்தை உடைத்துப் பலவீனப்படுத்தும் சதி நடவடிக்கையாக அரச படைகளின் புலனாய்வுத் துறையின் ஏற்பாட்டில் ஒட்டுப் படைகள் மூலம் மேற்கொள்ளப்படும் நாச வேலைகளும் அவற்றுக்கு எதிராக கிளம்பும் மக்கள் சீற்றமுமே இந்த வன்முறைகளின் வெளிப்பாடு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

புலிகளையும், புலிகளின் ஆதரவாளர்களான புத்திஜீவிகள், கல்விமான்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் போன்றோரையும் கொன்றொழிக்கும் ஒரு கோழைத்தனமான இரகசிய யுத்தம் - இருள் யுத்தம் - தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பது பரகசியமாகும்.

இந்த விடயத்தை புலிகளின் தலைவர் வே.பிரபாகரனே தமது மாவீரர் தின உரையில் தெளிவுபடுத்தியிருந்தார்.

*"எமது விடுதலை இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, எமது போராட்டத்திற்கு பங்கம் விளைவிக்கும் நோக்குடன் இந்த நாசகார நிழல் யுத்தம் ஏவிவிடப்பட்டது.......'*

*"இந்த நிழல் யுத்தத்தின் உண்மையான சூத்திரதாரிகள் யாரென்பது எமக்கு நன்கு தெரியும். இராணுவப் புலனாய்வுத் துறையின் வழிநடத்தலில் இந்த வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றபோதும், இதன் பின்புலத்தில் சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் அரூபகரங்கள் செயற்படுவதை நாம் அறிவோம். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில், அரச படையினரின் பாதுகாப்புக் கவசத்துடன் ஒட்டுப் படைகளான தமிழ் ஆயுதக்குழுக்களைக் கருவிகளாகக் கொண்டு இந்த மறைமுக யுத்தம் நடத்தப்படுகின்றது......*

*"போருக்கு ஓய்வு கொடுத்ததால் உருவாகிய சமாதானச் சூழலை சாதகமாகப் பயன்படுத்தி, ஒரு வித்தியாசமான மென் தீவிர யுத்தம் எம்மீது தொடுக்கப்பட்டிருக்கிறது. போர்நிறுத்த விதிகளுக்கு அமையத் தமிழ்க் கூலிப்படைகளின் ஆயுதங்களைக் களையவேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடு. இந்த முக்கியமான கடப்பாட்டை நிறைவு செய்யத் தவறிய இலங்கை அரசு, இந்த ஆயுதக் குழுக்களையே கருவியாகப் பயன்படுத்தி எமது விடுதலை இயக்கத்திற்கு எதிரான வன்முறையை ஏவிவிட்டிருப்பது ஒரு பாரதூரமான போர்க்குற்றமாகும்......"* - இப்படி தலைவர் வே.பிரபாகரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அவர் குறிப்பிடும் இந்தப் போர்க்குற்றங்களையும் அதன் பின்னணியில் இருக்கும் அரூபகரங்களையும் அம்பலப்படுத்தாமல் மூடி மறைக்கும் எத்தனத்தின் ஒரு பகுதியே இந்த ஆணைக்குழு நியமனப் பாசாங்காகும்.

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யும் பேச்சை ஜப்பானில் நடத்தவிரும்பினால் ஏற்பாடு செய்யத்தயார்!

## விசேட தூதுவர் யசூஷி அகாஷி அறிவிப்பு



கொழும்பு,டிசெ.13

"அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யும் பேச்சில், ஜப்பான் நேரடியாகப் பங்கு கொள்ளத் தயாராக இருக்கிறது. அத்தகைய பேச்சை ஜப்பானிலேயே வைத்துக் கொள்ளவும் முடியும்" - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜப்பானின் விசேட சமாதானத் தூதர் யசூஷி அகாஷி.

ஒருவாரம் கொழும்பில் தங்கியிருந்த அவர் நேற்றுமுன்தினம் மாலை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவித்தபோது கூறியதாவது:-

"விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுகளை இலங்கைக்கு வெளியில் நடத்த இலங்கை அரசு தயராக உள்ளது எனவும் ஆசிய நாடு ஒன்றிலேயே அத்தகைய பேச்சுக்களை நடத்த இலங்கை விரும்புகிறது"- எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னிடம் தெரிவித்தார். என்றும் அவர் கூறினார்.

அவ்வாறாயின் அத்தகைய பேச்சை தனது நாடான ஜப்பானிலேயே நடத்தலாம் எனவும் -

அத்தகைய பேச்சை ஜப்பானில் நடத்தத் தேவையான ஏற்பாட்டையும், வசதியையும் செய்யத் தாம் தயாராகவுள்ளனர் எனவும் இருதரப்பும், அரசும் - புலிகளும் - இதனை ஏற்றுக்கொண்டால் -

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனும், கண்காணிப்புக்குழுவின் அவசியமான பிரசன்னத்துடனும் பேச்சுகளை ஜப்பானில் நடத்த நாம் தயாராகவே இருக்கிறோம் என அவர் இலங்கை ஜனாதிபதியிடம் தெரிவித்தார் எனவும் கூறினார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள், எதிர்பாராத திடீர் விளைவுகளைத் தோற்றுவிக்கும் அபாயம் உடையவை. எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி பெல்ஜியம், தலைநகரில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகள் சந்திக்கவுள்ளன. இந்த முக்கிய சந்திப்பில் இலங்கையில் - இப்போது ஏற்பட்டுள்ள முக்கியமான நிகழ்வுகள் குறித்தும், சமாதானம் ஏற்படுவதற்கான சாத்தியம் பற்றியும், அதன் அடிப்படைகள் சம்பந்தமாகவும் விரிவாக ஆராய இருக்கிறோம்.

சமாதான முயற்சியில் நாம் ஒரு வகையான வரலாற்றுத் திருப்புமுனையைச் சந்தித்திருக்கிறோம். இணைத் தலைமை நாடுகள், இத்திருப்புமுனை குறித்து ஆராய்ந்து எவ்வாறு பயனுள்ள முறையில் இலங்கைக்கு உதவமுடியும் என்பது குறித்துப் பெல்ஜியம் தலைநகரான பிரஸ்ஸல்ஸில் சந்திப்பில் - அறிவிப்போம் எனவும் கூறினார்.

வழமையாக நீங்கள் கிளிநொச்சி சென்று அங்கு புலிகளுடன் பேச்சு நடத்துவீர்கள். இம்முறை அப்படிச்செய்யவில்லையே, ஏன் எனக் கேட்கப்பட்டதற்கு, அவர் தெரிவித்ததாவது -

இதுவிடயத்தில் அரசின் விருப்புடன் இணைந்து செல்ல நான் முடிவு எடுத்தேன். அதனால்தான் நான் அங்கு - கிளிநொச்சிக்குச் செல்லவில்லை எனத் தெரிவித்தார் அவர். இலங்கை அரசு, இப்போது நான் முன்னர் கூறியதுபோல் - மிகவும் நுணுக்கமான முறையில் சமாதான முயற்சிகள் குறித்தும், அதன் எதிர்கால அணுகுமுறை, உபாயம் பற்றியும் ஆராய்ந்து வருகிறது.

இந்த ஆராய்வில் விடுதலைப்புலிகளுடனான தொடர்பு, நோர்வே அரசின் அனுசரணைப்பணி என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு பற்றியும் அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

நோர்வேயைப் பொறுத்தவரை அது நேர்த்தியான, நேர்மையான அனுசரணைப் பணியை வழங்கி வருகிறது என ஜப்பான் கருதுகிறது. இப்பணிக்கும் நோர்வேக்கும் எப்போதும், இணைத் தலைமைகளினதும், ஜப்பானினதும் முழு ஆதரவும் உண்டு என்றும் கூறினார் யசூஷி அகாஷி.

இலங்கை அரசு, யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவையும், யுத்த நிறுத்த உடன்படிக்கையையும் மீள்பரிசீலனை செய்து வருகிறது. யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் எண்ணம் எதுவும் ஜப்பானுக்குக் கிடையாது.

அக்குழுவைப் பொறுத்தவரை, அதில் நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து என ஐந்து நாடுகள் பங்குகொள்கின்றன. அவர்கள் நல்லதொரு பணியையே ஆற்றி வருகிறார்கள்.

இலங்கை அரசு இந்த ஐந்து நாடுகளில் நோர்வே தவிர்ந்த இன்னொரு நாட்டை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பதவியை ஏற்க முடியுமா என்பது குறித்து விருப்புடன் ஆராய்ந்து வருகிறது.

ஆகவே, தயவுசெய்து இதனைத் தப்பாக விளங்கிக்கொள்ள வேண்டாம் என்று கூறினார் அகாஷி.

அத்துடன், ஏற்கனவே உள்ள நான்கு இணைத் தலைமைகளுடன் இந்தியாவும் இன்னுமொரு இணைத்தலைமையாக பங்காற்ற விருப்பமாக இருக்கிறது என்று வெளிவரும் செய்திகளில் உண்மை ஏதும் இல்லை என்றும் -

ஆனால், இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் அயல் நாடான இந்தியாவுடன் சர்வதேச சமூகம், பயன் உள்ள கலந்துரையாடலிலும், ஆலோசனையிலும் ஈடுபட்டு வருகிறது என்றும்-

இந்தியா, பல்வேறு வழியில் இலங்கை சமாதான முயற்சிக்கு அனுசரணை வழங்கி வருகிறது என்றும் கூறினார் யசூஷி அகாஷி. (க)

# இயற்கை அனர்த்த முன்னெச்சரிக்கை சாதனங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு

இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக மக்களை முன்னெச்சரிக்கைப்படுத்தும் ஒலி எழுப்பும் சாதனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன மேற்கொண்டு வருகின்றார்.

இயற்கை அனர்த்தங்களை உணர்ந்தவுடன் அதுபற்றி மக்களுக்கு அறிவிக்கும் 'சைரன்' ஒலி எழுப்பும் சாதனங்களே வழங்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு, தெற்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள கோவில்கள், தேவாலயங்கள், விகாரைகள் போன்றவற்றுக்கு இந்த சாதனங்கள் வழங்கப்படவுள்ளன. இதனைப் பெறவிரும்புபவர்கள் நாடாளுமன்ற உறுப்பினருடன் தொடர்புகொள்ளலாம்.

# வலி.கிழக்கு தோட்டங்களில் மழைவெள்ளம்: கிழங்கு வகைகள் அழிந்துவிடும் நிலையில்!

அச்சுவேலி,டிசெ.13

வலிகாமம் கிழக்கு பயிர்ச்செய்கை நிலங்களில் மழைவெள்ளம் தேங்கி நிற்பதை அடுத்து, அங்கு செய்கைபண்ணப்பட்டிருந்த மரக்கறிப் பயிர்கள் பலவும் அழிந்து விடும் நிலையில் உள்ளன.

குறிப்பாக, அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி ஆகிய பகுதிகளில் உள்ள தோட்ட நிலங்களில் மழைவெள்ளம் கடல்-போலத் தேங்கி நிற்கின்றது.

இதனால், மேற்படி பகுதிகளில் உள்ள தோட்டங்களில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயம், கோவா, கரட், முள்ளங்கி, பீற்றூட், மரவள்ளி முதலிய கிழங்கு வகைகள் அழுகிச் சேதமடைந்துள்ளன.

அதேவேளை, செய்கை பண்ணப்பட்டிருந்த கத்தரி, பயிற்றை, பாகல், மிளகாய்ச் செடிகள் துஞ்சி வாடிய நிலையில் காணப்படுகின்றன.

விவசாயிகள் செய்கை பண்ணிய பயிர்களை மீட்க முடியாமலும் -

தோட்டங்களில் தேங்கி நிற்கும் வெள்ளத்தை அகற்ற முடியாமலும் சிரமப்படுகின்றனர். (எ-17-11)

# நத்தார்-புதுவருட வியாபாரத்தை முன்னிட்டு வணிக நிலையங்களைத் திறக்க அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.13

எதிர்வரும் நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக நிறுவனங்கள் நாளைமறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் முதலாம் திகதி வரையுள்ள ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு யாழ். வணிகர் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக வணிகர் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், விடுமுறை தினங்களில் வேலை செய்யும் சகல ஊழியர்களின் நலன்கள் பேணப்படவேண்டும். அடுத்த மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் சகல வர்த்தக நிறுவனங்களும் ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் பூட்டப்பட்டு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றுள்ளது. (எ-202)

## நாளை

கார்த்திகை 29
புதன்கிழமை
14.12.2005
திதி: சதுர்த்தசி
முன்னிரவு : 09.44 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
முற்பகல் : 09.24 வரை
சுபநேரம் : 04.51- 06.21
ராகுகாலம் : 12.21 - 01.51
(யாவும் பழைய நேரப்படி)

# ஊர்காவற்றுறை – காரைநகர் இடையில் பாதைப் படகில் பயணம் செய்வதில் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஊர்காவற்றுறைக்கும் - காரைநகருக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் பாதைப் படகில் பயணிப்பவர்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக சேவையில் ஈடுபடும் பாதைப் படகினை, ஊர்காவற்றுறை துறைமுகப் பகுதியிலும் அதேபோல் காரைநகர் துறைமுகப் பகுதியிலும் அணைய விடுவதற்கு வசதியான கட்டடப் பகுதி எதுவும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இதனால், பாதைப்படகில் பயணம் செய்வோர், மேற்படி இரண்டு துறைமுகப் பகுதியிகளிலும் சுமார் 2 அடி உயரமுடைய கடல்பகுதியினூடாக நனைந்து சென்றே பாதைப்படகில் பயணிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை- மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் பயணிப்பவர்கள் மேற்படி சிரமத்தினைக் கருத்தில் கொண்டு காரைநகர், ஊர்காவற்றுறை துறைமுகப் பகுதிகளில் இவற்றை நிறுத்திவிட்டு பாதைப் படகில் பயணிக்கவேண்டியுள்ளதாகவும் - சுட்டிக்காட்டப்படுகிறது.

சில சமயங்களில் பாதைப் படகு திடீரென துறைமுகப்பகுதியில் நிறுத்தப்படும்போது, பாதைப் படகின் முன் பகுதி சேதமடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - கூறப் பட்டது. (எ)

## உதயவாக்கு

விடாமுயற்சியும் குறிக்கோளும் வெற்றிப் பாதையில் முன்னேற உதவும் இரு சக்கரங்கள்.

- ஓர் அறிஞர்.

## பத்திரிகை மடிப்பவர்கள் தேவை

- ★ பத்திரிகை மடிப்பவர்கள் உடன் தேவை.
- ★ அனுபவம் உள்ளவர்களுக்கும் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- ★ விண்ணப்பதாரர்கள் 13 -12-2005, 16-12-2005 முற்பகல் 10 மணி தொடக்கம் 3 மணிவரை நேரில் வரவும்.

**உதயன்**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/46743)
(24-18-17-34)

## துயர் பகிர்கின்றோம்



எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
செல்வி சே.பிளசிடா குமுதினி
அவர்களின் அன்புத் தந்தை

### திரு.M.G.சேவியர்

[ஓய்வுபெற்ற பிரதி அதிபர்]

அவர்கள் 12.12.2005 அன்று எம்மைவிட்டுப் பிரிந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய இணைப்பாளர், சக உத்தியோகத்தர்கள்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,
யாழ்ப்பாணம்.

(43946) (21.17.18.34)

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பர் சுரேன் கிறிஸ்தோப்பர்
அவர்களின் அன்புத் தந்தை

### J.E. துரைசிங்கம் கிறிஸ்தோப்பர்

(முன்னாள் உரிமையாளர், பிறிமியர் பேக்கரி )

அவர்கள் 10.12.2005 இல் இறைபதம் அடைந்த செய்திகேட்டு மனம் வருந்துவதுடன் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நுவிங்கின் ஸ்ராஸ் வெதுப்பகம்,
கொழும்புத்துறை விதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

(43940)( 32-18-17-34)

## மரண அறிவித்தல்கள்

### தவசிப்பிள்ளை வேலுப்பிள்ளை

( ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர்)



குரு வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தேவாலய வீதி, உரும்பிராய் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தவசிப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்கள் 12.12.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி தவசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கமலாம்பிகை (கனடா), கமலேஸ்வரி (பிரான்ஸ்), அமரச்செல்வி (எழுதுநர், இலங்கை மின்சார சபை பிரதேச அலுவலகம், சுன்னாகம்), கஜனி (பிரான்ஸ்), கஜப்பிரதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் விக்னேஸ்வரன் (கனடா), தவக்குமார் (பிரான்ஸ்), சற்குணராஜா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி), குலசேகரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌசிகன், ராம்ஜி, டினேஸ், தாரணி, சுலக்ஷனா, வேதிகா, சாருகா, திவ்யன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*தகவல்:*
*திருமதி வே.சரஸ்வதி (மனைவி),*
*திருமதி அமரச்செல்வி சற்குணராஜா (மகள்).*

*தேவாலய வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

(43933)( 32.-18-17-34)

### மு.செல்லத்தம்பி

(ஓய்வுபெற்ற அதிபர்)



''வளர்மதி'', கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மு.செல்லத்தம்பி அவர்கள் 12.12.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் பவானி (ப.அ.ச), அரவிந்தன் (ஜேர்மனி), மாலினி, பாமினி, பத்மராணி (ஆசிரியை, யா/இமையாணன் அ.த.க.வி.), சுரேந்திரன், யாழினி (சேவா லங்கா மன்றம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் தங்கத்துரை இராசரத்தினம் (ப.தெ.வ.அ.கூ.ச), வரதராசா, பத்மகுமாவதி (ஜேர்மனி), கருணாகரன் (ச.சு.உ.யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் ஸபீனா, ராகவி, பிரவீன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2005) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'வளர்மதி'*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

(43914)( 32-18-17-34)

## யாழ்.இந்து மாணவருக்கு வியாழனன்று இலவச பாடநூல் விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் தரம் 6முதல் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கு நாளைமறுதினம் வியாழக்கிழமை இலவசப் பாடநூல்கள் விநியோகிக்கப் படவுள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் அன்றைய தினம் காலை 9 மணி முதல் 12 மணிவரை கல்லூரிக்குச் சமுகமளித்து புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - சகல மாணவர்களும் தற்போது தம்மிடம் உள்ள புத்தகங்களுடன் தவறாது சமுகம் தரவேண்டும் என்றும் -

அத்துடன், சகல வகுப்பாசிரியர்களும் அன்றையதினம் கல்லூரிக்கு வருகை தரவேண்டும் என்றும் - கல்லூரி அதிபர் வீ.கணேசராசா அறிவித்துள்ளார். (எ)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

இலங்கை இளைஞர் தொழிலாக்கல் வலையமைப்பின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் யாழ்.செயலகத்தில் நடத்தப்படவிருந்த யாழ்.மாவட்டப் பிரிவுக்குழுவின் கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று பிரதித் திட்டப் பணிப்பாளர் கே.குணாளசிங்கம் தெரிவித்தார்.

இளைஞர் வேலைவாய்ப்புத் தொடர்பாக சமூக தொடர்பாடல் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய இக்கலந்துரையாடல் நடைபெறவிருந்தது எனவும் -

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (3-203-204)

## கல்குடாவில் குண்டு மீட்பு

ஏறாவூர்,டிசெ.13

வாழைச்சேனை- கல்குடா பிள்ளையார் கோயிலுக்கு அருகில் பாழடைந்த வீடொன்றின் முன்னால் காணப்பட்ட குண்டொன்றை இராணுவத்தினர் மீட்டெடுத்து செயலிழக்கச் செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 12.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது. வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே இக்குண்டைக் கண்டெடுத்துள்ளனர்.

இப்பகுதியில் வழக்கமாக வீதிப்பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் இராணுவத்தினரை இலக்கு வைத்தே இக்குண்டு இவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கலாம் என்று வாழைச்சேனைப் பொலீஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குண்டு செயலிழிக்கச் செய்யும் விஷேட இராணுவத்தினரின் உதவியுடன் இக்குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது என வாழைச் சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தையடுத்து இப்பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதலொன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும் எவரும் கைது செய்யப்படவில்லை. (க-157)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் மீது திருமலையில் சூடு

கொழும்பு,டிசெ.13

திருகோணமலை அலஸ் தோட்டப் பகுதியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்டவர் இரு பிள்ளைகளின் தந்தையான வசந்தராஜா மைக்கல் கொலின் (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தில்லை நகரில் உள்ள தனது வீட்டில் இருந்து ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் எதிரேவந்த இனம்தெரியாதோர் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
*கட்டணம் 1000/=வுடன் 3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில இல்லையேல் மேலும் 3 மாதங்கள் இலவசம். காலை வகுப்புகள்.*
By: *விக்னேஸ்வரன் ஆச்சாரி,*
*426(302) K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.*
(43935)

## அன்பொளி கல்வியகம்

*2006 ஆம் ஆண்டு*
*தரம் 4 மாணவர்களுக்கான*

### புதிய வகுப்புகள் ஆரம்பம்

*15.12.2005 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. அனுமதிகளை செவ்வாய், புதன் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணிவரை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.*

இடம்: அன்பொளி கல்வியகம்,
நீராவியடிப் பிள்ளையார் கோயில் பின் வீதி,
யாழ்ப்பாணம்.

- இயக்குநர்.

(43944)(42-18-17-34)

## பிரியாவிடை வைபவம்

யாழ்ப்பாணக் கல்லூரியில் மிசனரியாகப்
பணியாற்றிய

### செல்வி டயான் (F)பெயர்ஸ்

அவர்களின் பிரியாவிடை வைபவம் எதிர்வரும் 15.12.2005 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு 'ஒட்லி' மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்வைத் தொடர்ந்து மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்படும்.

*அதிபர்,*
*யாழ்ப்பாணக் கல்லூரி,*
*வட்டுக்கோட்டை.*

(சி/46753)( 32-)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Diploma in MS Office
- Diploma in Internet & E-Mail
- Diploma in Desktop Publishing
- Diploma in Computer Hard ware
- Diploma in Computer Programming (Java, V.B.Net,C++,Pascal)
- Grade - 10 ICT(Tamil Medium)
- Children Program

Start on :- 14.12.2005

மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்

**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

## கண்ணீர் அஞ்சலி

எமது கம்பனி பங்காளர் சுரேன் கிறிஸ்தோப்பர்
அவர்களின் அன்புத் தந்தை

### J.E. துரைசிங்கம் கிறிஸ்தோப்பர்

(முன்னாள் உரிமையாளர், பிறிமியர் பேக்கரி )

அவர்கள் 10.12.2005 இல் இறைபதம் அடைந்த செய்திகேட்டு மனம் வருந்துவதுடன் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
எஸ்.ஜே and பிரேட் ஏஜென்சி.

(43941)( 32-18-17-34)

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பர் சுரேன் கிறிஸ்தோப்பர்
அவர்களின் அன்புத் தந்தை

### J.E. துரைசிங்கம் கிறிஸ்தோப்பர்


(முன்னாள் உரிமையாளர், பிறிமியர் பேக்கரி )

அவர்கள் 10.12.2005 இல் இறைபதம் அடைந்த செய்திகேட்டு மனம் வருந்துவதுடன் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சீலன் வெதுப்பகம்,
சங்கரத்தை வீதி, நவாலி.

(43939)( 32-18-17-34)

## இதய அஞ்சலி



எமது (பிறிமியர் பேக்கரி)
நிறுவனத்தின் முன்னாள்
உரிமையாளரும் தற்போதைய
உரிமையாளர்
**சுரேன் A.E.கிறிஸ்தோப்பரின்** பாசமிகு
தந்தையுமான

### J.E.துரைசிங்கம் கிறிஸ்தோப்பரின்

மரணச் செய்திகேட்டு
அதிர்ச்சியுற்ற நாம் அன்னாருக்கு எமது இதயம் கனிந்த அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிறிமியர் பேக்கரி,
73, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

- நிர்வாகமும் ஊழியரும்.

(43926) (24-18-17-34)

# பொருண்மிய மேம்பாட்டுத்திட்டம் குறித்து மன்னாரில் நடந்த கலந்துரையாடல்

பரந்தன்,டிசெ.13

மன்னார் மாவட்டத்தில் அடுத்தவருடம் மேற்கொள்ளப்படவுள்ள பொருண்மிய மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

மன்னார் ஆண்டான்குளம் பகுதியில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் மாவட்ட பொறுப்பாளர் செழியன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

மன்னார் மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள், அவற்றின் முன்னேற்றங்கள் பற்றியும் -

அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தப் படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதில் விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை அபிவிருத்திச் சுகாதாரத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-6-352)

# நோர்வே அகதிகள் பேரவையால் வவுனியாவில் 85 வீடுகள் அமைப்பு

பரந்தன்,டிசெ.13

வவுனியா சின்னப்புதுக்குளப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு நோர்வே அகதிகள் பேரவையால் நிர்மாணிக்கப்பட்ட 85 வீடுகள் உரியவர்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக இப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் 2001ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்தபோதும் நிரந்தர இருப்பிட வசதிகள் இன்றிப் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இவற்றை நிவர்த்திசெய்யும் முகமாக நோர்வே அகதிகள் பேரவையால் தலா இரண்டரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 85 வீடுகளும் அக்கிராம மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் நோர்வே அகதிகள் பேரவையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன் கிளிஸ்ரென்சன், வவுனியா மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-6-352)

# கண்டாவளை மகாவித்தியாலயத்திற்கு 'பாண்ட்' வாத்தியங்கள் வழங்கப்பட்டன

பரந்தன்,டிசெ.13

கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தியாலயத்திற்கு கண்டாவளையில் இருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் ஒருவரால் மேலைத்தேச இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான இந்த மேலைத்தேச இசைக்கருவிகளைப் புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் வே.தெட்சணாமூர்த்தி என்பவரே வழங்கியுள்ளார்.

இப்பொருள்களை உத்தியோகபூர்வமாகப் பாடசாலை முதல்வரிடம் கையளிக்கும் வைபவம் கடந்த வாரம் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.


இந்நிகழ்வில் மங்கள விளக்கினை, இசைக்கருவிகளை அன்பளிப்புச் செய்தவரின் சகோதரரான வே.ஐயாத்துரை, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மா.ஸ்ரீகணநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியைப் பாடசாலை முதல்வர் சி.சிறீதரனும் பாடசாலைக் கொடியைப் பிரதி அதிபர் திருமதி இ.பாலேந்திராவும் ஏற்றினர்.

பாராட்டுச் சான்றிதழ்களையும் பரிசில்களையும் கண்டாவளைப் பகுதிக் கிராம சேவையாளர் இ.சண்முகநாதன் வழங்கினார். தொடர்ந்து மேலைத்தேச இசைக் கருவிகளை வே.தெட்சணாமூர்த்தியின் சகோதரர் வே.ஐயாத்துரை, வித்தியாலய அதிபர் சி.சிறீதரனிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார்.

இறுதியில் நன்றியுரையினை வித்தியாலய ஆசிரியர் உ.சுரேஸ்குமார் நிகழ்த்தினார்.

(ஐ-6-352)



கண்டாவளை மகா வித்தியாலயத்துக்கு மேலைத்தேச இசைக்கருவிகள் வழங்கும் வைபவத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மா.சிறிகணநாதன், கருவிகளை அன்பளிப்புச் செய்தவரின் சகோதரர் வே.ஐயாத்துரை ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றுவதைப் படங்களில் காணலாம். (படம்: பரந்தன் செய்தியாளர்)

# இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் மேலும் உயர்வு

பரந்தன்,டிசெ.13

மீண்டும் பலத்தமழை பெய்ததையடுத்து இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 31 கன அடி அளவு உயர்ந்துள்ளது.

34 கன அடி அளவு கொள்ளளவுடைய இக்குளத்திற்கு நிமிடத்திற்கு 3,500 கன அடி அளவு தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

குள அணைக்கட்டின் பாதுகாப்புக் கருதி வலதுகரையில் 6 கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுகிறது.

இடது கரையில் 5 கதவுகள் ஒன்றரை அடி உயரம் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றும் பணிகள் நடைபெறுகின்றது.

தண்ணீரின் வரவு கூடும் பட்சத்தில் இந்தக் கதவுகள் முழுமையாகத் திறக்கப்படும் என நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த மாதம் 30ஆம் திகதி தொடக்கம் கடந்த சனிக்கிழமை காலை 7 மணிவரை இப்பகுதியில் 32 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-352-204)

# கணிப்பீடுச் செயலமர்வு வியாழனன்று கிளிநொச்சியில்

வட்டக்கச்சி,டிசெ.13

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 9 வரையான வகுப்புகளில் தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் சமூகக்கல்வி ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான பயிற்சிச் செயலமர்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ், கணிதம் ஆகிய பாடங்களுக்கான செயலமர்வு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களுக்கான செயலமர்வு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையிலும் நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வுகளில் குறித்த வகுப்புகளில் குறித்த பாடங்களைக் கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரைப் பாட ரீதியாக அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களைக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கேட்டுள்ளார். (ஐ-6-405)




## ஒளிவிழா

வட்டக்கச்சி,டிசெ.13

இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ச.புண்ணியமூர்த்தி தலைமையில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் வட்டக்கச்சி பங்குத் தந்தை அருட்திரு அன்ரன் றொக் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வரவேற்புரை, தலைமையுரை என்பவற்றைத் தொடர்ந்து ஆசியுரையினை அருட் சகோதரி சகுந்தலாதேவி நிகழ்த்தினார். பிரதம விருந்தினர் உரையினை அன்ரன்றொக் அடிகளார் நிகழ்த்தினார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.(ஐ-6-405)

## 'விபுலம்' சஞ்சிகை வெளியீடு

பரந்தன், டிசெ.13

பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரியினால் வருடாந்தம் வெளியிடப்படும் 'விபுலம்' சஞ்சிகை கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது.

கல்லூரி அதிபர் மு.ஜெயகரன் தலைமையில் கல்லூரியின்பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இந்த வெளியீட்டு வைபவத்தில் வரவேற்புரையை ஆசிரியர் திருமதி ஜே.சைலஜாவும் நூல் வெளியீட்டுரையினை ஆசிரியர் சு.பிரபாகரனும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை கல்லூரி அதிபர் வெளியிட்டு வைக்க 'திருச்செந்தூரன் அரிசி ஆலை' உரிமையாளர் இராமமூர்த்தி அதனைப்பெற்றுக்கொண்டார்.

(ஐ-6-352)

# காணிப் பதிவக நடமாடும் சேவை இராமநாதபுரத்தில் இன்று

வட்டக்கச்சி,டிசெ.13

கிளிநொச்சியிலுள்ள கரைச்சிப் பிரதேச செயலக உப பணிமனையில் காணிப்பதிவக நடமாடும் சேவை இன்று நடைபெறவுள்ளது.

இராமநாதபுரத்தில் அமைந்துள்ள பிரதேச செயலக உப பணிமனையில் நடைபெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் அரச காணிகளில் குடியிருப்போருக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கல், காணி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களுக்கான பதிவு மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. காணி சம்பந்தமான ஏனைய பிரச்சினைகளும் ஆராயப்பட்டு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதில் வட்டக்கச்சி, மாயவனூர், மாவடி, இராமநாதபுரம் ஆகிய கிராமசேவை அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்களைப் பங்குகொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(ஐ-6-405)

# செங்கண்மாரி நோயைத் தடுக்க பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள்

புதுக்குடியிருப்பு,டிசெ.13

வன்னிப் பகுதியில் செங்கண்மாரி நோயின் பரம்பலைத் தடுப்பதற்கு தமிழீழ சுகாதார சேவைகளின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது தாயகப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள ஆழிப்பேரலை இடைத்தங்கல் முகாம்களில் செங்கண்மாரிநோயின் தாக்கம் சற்று அதிகரித்துள்ளது.உள்ளெடுக்கும் நீர், உணவு என்பன மாசடைதல் மூலம் இந் நோய் ஏற்படுகிறது.

இது ஒரு வைரஸ் நோயாக இருப்பதனால் இந் நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமானதாகும். இந்நோய் வராமல் பாதுகாக்க பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு தமிழீழ சுகாதாரசேவையின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தினமும் கொதித்தாறிய நீரைப் பருகுதல், மலத்தை பாதுகாப்பாக நீரடைப்பு மலசலகூடங்களில்கழித்தல், அவை இல்லாத விடத்து வெட்டிப் புதைத்தல், குழந்தைகளின் மலத்தை மலசலகூடங்களிலே அப்புறப்படுத்தல், மலசலகூடம் சென்றபின்னும் உணவு உட்கொள்ள, உணவு பரிமாற முன்னரும் கைகளுக்குச் சவர்க்காரம் இட்டுக் கழுவுதல், சமைத்த உணவுகளை மூடிப் பாதுகாத்தல், ஆறிய உணவை மீண்டும் சூடாக்கி உண்ணுதல் ஆகியவற்றைச் செய்வதன் மூலம் இந் நோய் ஏற்படுவதிலிருந்து எம்மைப் பாதுகாக்க முடியும்.செங்கண்மாரிநோயின் பரம்பலைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம் - என்று தமிழீழ சுகாதார சேவைகளின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6-353)

# கல்மடு நகர் மக்களுக்கு உணவல்லாத நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுகின்றன

வட்டக்கச்சி,டிசெ.13

கிளிநொச்சி, கல்மடு நகரம் கிராமத்தில் உள்ள மக்களுக்கு வெள்ள நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கரைச்சி வடக்குப் புனர்வாழ்வு நிறுவனம் 'சொலிடர்' நிறுவன அனுசரணையுடன் இந்த நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றது. இதன்படி நாவல்நகர் கிராமத்தில் 113 பயனாளிகளுக்கு கடந்த வியாழக்கிழமை நாவல் நகர் தேவாலயத்தில் வைத்து உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டன. அதே நேரம் நேற்றுமுன்தினம் சம்புக்குளம் கிராமத்தில் 236 பயனாளிகளுக்கு உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து கல்மடு நகர் கிராமத்தில் இந் நிவாரண நடவடிக்கை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நிவாரணப் பொருள்களில் நில விரிப்பு உட்படப் பல பொருள்கள் வழங்கப்பட்டன. இதன்போது கல்மடுநகர் கிராமசேவையாளர் சி.பரமதாஸ் மக்களை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டிருந்தார்.

(ஐ-6-405)



## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

மோட்டறோலா தொலைபேசி சோலர் பற்றியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.பாக்கியநாதன், மட்டுவில் தெற்கு (இலுப்பையடி வீதி), சாவகச்சேரி. தொலைபேசி 0602213065.

(43929)

### கடை விற்பனைக்கு

இல.305/1, ஸ்ரான்லி வீதியில் சகல வசதிகள் கொண்ட 3 மாடி கடை (42 அடி நீளமும் 12 அடி அகலமும்) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 6158802.

(43913)

### தவறிவிட்டது

செல்வராசா அஜந்தன் என்பவருடைய தே.அ.அட்டை (850462402V) 01.12.2005 அன்று மானிப்பாய்க்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் K.K. போன்சொப், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முக்வரியுடனோ Or 077 9527555 எனும் தொலைபேசி எண்ணுடனோ தொடர்புகொள்ளவும்.

(43923)

### அபூர்வஜோதிடம்

தீராத கொடிய நோய்களைக் குணமாக்கும் மதிநுட்பம் வாய்ந்த மருந்தியல் அதிஷ்ட பலன்களைக் கண்டறிதல். தினமும் 8.30 - 2 p.m. தொடர்பு: விதானையார் வளவு, உயரப்புலம், பண்ணையார் கோயிலடி, ஆனைக்கோட்டை.

(43925)


## கண்ணீர் அஞ்சலி

### ம.ஞா.சேவியர்

*(இளைப்பாறிய பிரதி அதிபர்)*

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/சென்.மேரிஸ் வித்தியாலயம்**
(O.L.R.)

(43922)(42.11.14)

## கேள்வி அறிவித்தல்

### இலங்கை மின்சார சபை (வடமாகாணம்)

கீழ்க்குறிப்பிடப்படும் சேவைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலையை (Quatation) 2005.12.23 ஆம் திகதி காலை 10 மணிவரை இலங்கை மின்சாரசபை (வடமாகாணம்) கூறுவிலைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பருத்தித்துறை மின்பாவனை சேவை நிலையத்திற்கு ஒரு வருட காலத்திற்கு (01.01.2006 - 31.12.2006) பிக்கப் (Pick-up) அல்லது வான் (Van) வாடகைக்கு அமர்த்துவதற்கு கூறுவிலையாளர்கள், கூறுவிலைப் பத்திரங்களை ரூபா 500.00 (ஐந்நூறு) காசாகவோ அல்லது *பொதுமுகாமையாளர், இலங்கை மின்சாரசபை, கொழும்பு* என்ற பெயரில் பெறப்பட்ட வங்கிக் கட்டளையாகவோ சமர்ப்பித்து, *இல: 188, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்* என்னும் விலாசத்திலுள்ள *பிரதிப் பொதுமுகாமையாளர், (வடமாகாணம்)* அலுவலகத்தில் 2005.12.22ஆம் திகதி வியாழக்கிழமை வரை அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்தின் பின் உடனடியாக அவை *பிரதிப் பொதுமுகாமையாளர், இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்* அலுவலகத்தில் திறக்கப்படும்.

கூறுவிலையாளர்கள் இலங்கை மின்சார சபையிலிருந்து பெறப்பட்ட கூறுவிலைப்பத்திரங்களில் மாத்திரம் இணைப் பிரதிகளில் (Duplicate) பூர்த்திசெய்து, கடித உறையிலிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலை விவரம், கூறுவிலை இலக்கம் என்பன இட்டு மேற்குறித்த முகவரிக்கு 2005.12.23 ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது இவ்வலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விவரங்களை மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
*மாகாண கேள்விச்சபை*
*(வடமாகாணம்).*

மாகாண கேள்விச்சபை,
(வடமாகாணம்),
*இலங்கை மின்சாரசபை,*
*188,ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(246751)(42.11.14)

தொலைபேசி இல: 021 222 2496, 021 222 3233.
தொலைநகல்: 021 222 2497

''சூழல் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும்''
**இலங்கை மின்சாரசபை**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆருயிர் நண்பனும்
மைத்துனருமாகிய
கைதடி வடக்கைச் சேர்ந்த

**சுப்பிரமணியம் பூபாலசிங்கம்**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு கைதடி மக்கள் சார்பிலும் எனது குடும்பத்தினர் சார்பிலும் வாழ்த்துகின்றேன். இவர் இளம் விவசாயிகள் கழகம், கைதடி வடக்கு சனசமூக நிலையம் ஆகியவற்றின் முன்னாள் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கைதடி வடக்கு,
கைதடி.

மைத்துனர்
அ.த.தர்மகுலசிங்கம்
(சுவிஸ்)

(43928)(42-11-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்



### அமரர் அருணாசலம் தில்லையம்பலம்

அன்னை மடியில்
**17.07.1903**

இறைவன் அடியில்
**14.11.2005**

இப்புவியில் **102** வருடங்கள் வாழ்ந்து
வண்ணமுறு உறவையெல்லாம் அன்புடன்
அரவணைத்து அறிந்தவர்கள்
அனைவருடன் இன்புற உரையாடிய
உங்கள் முகத்தை இனிக் காண்பதெப்போ ?

14.11.2005 அன்று 103 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்த எமது தந்தையின் மரணச்சடங்கில் பங்குபற்றியோருக்கும், தொலைபேசி, தந்தி, தபால்மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றி நவில்கின்றோம். மேலும் எமது இல்லத்தில் நாளை (14.12.2005) புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்துகொண்டும் அன்று நண்பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(43557)(51)


## "Music World"இன் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி

01-12-2005 முதல்
30-12-2005 வரை

மாபெரும் மலிவு விற்பனை

MasterCard VISA

முக்கிய குறிப்பு:-
இலங்கை வங்கி, மக்கள் வங்கி, செலான் வங்கி மற்றும் கொமர்சல் வங்கி ஆகியவற்றின் கடனட்டை மூலம் (Visa, Master) பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு மேலும் 03% கழிவு வழங்கப்படும்.

- புதிய, பழைய வீடியோ சீடிக்கள்
- புதிய, பழைய, இடைக்கால ஓடியோ சீடிக்கள்
- அனைத்து வகையான MP-3சீடிக்கள்
- தமிழ் மற்றும் ஆங்கில D.V.D கள்
- கர்நாடக சங்கீத சீடிக்கள்
- இந்து கிறிஸ்தவ பக்திப் பாடல் சீடிக்கள்
- Sof Ware, Games சீடிக்கள்

என்பனவற்றை கொள்வனவு செய்வோருக்கு 05% முதல் 25% வரை விலைக்கழிவு ...!

இவற்றைவிட இக்காலப்பகுதியில் ஒளி, ஒலிப்பதிவை மேற்கொள்வோருக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

**Music World**
பலாலி வீதி, தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. தொ.பே: 021 222 6554, 021 222 6542
E-mail:- itnkamesh@yahoo.com


### வெங்காயச் செய்கை கடும் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.13

கடந்த 10 ஆம் திகதி பெய்த கடும் மழை மற்றும் புயல் காற்று காரணமாக உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த நாவலடி, ஊரிக்காடு, மயிலியந்தனை, கெருடாவில், கொம்மாந்தறை ஆகிய பகுதிகளில் செய்கை பண்ணப்பட்டிருந்த வெங்காயப் பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன.

இதனால் 250 இற்கும் அதிகமான வெங்காயச் செய்கையாளர்கள் நஷ்டம் அடைந்துள்ளனர்.

பெரும் நிதி நெருக்கடியின் மத்தியில் தாம் வெங்காயச் செய்கையை மேற்கொண்டனர் என விவசாயிகள் தெரிவித்தனர். (எ-185)

## மரண அறிவித்தல்

### கந்தையா கிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், B.Sc. (Hons), F.I.F.A.)



மீசாலையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், B.Sc. (Hons), F.I.F.A.) 11.12.2005 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா - சின்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் பாசமிகு சகோதரனும் ஜெயமணியின் அன்புக் கணவரும் கலாஜினி (கனடா), ராதாகிருஷ்ணன் (கனடா), சாந்தினி (இத்தாலி)ஆகியோரின் அன்புத் தந்தையும் பிஞ்ஞகநாதன் (கனடா), ரேவதி (கனடா), தயரூபன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கீர்த்தனன் (கனடா), பவித்திரா (கனடா), தாரணன் (கனடா), ஷானுகா (கனடா), லக்ஷிகா (கனடா), பிரீத்திகா (இத்தாலி), அக்ஷயா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துவாரகை,*
*மானிப்பாய் தெற்கு,*
*மானிப்பாய்.*

(43917)(42.11.14)

தகவல்:
திருமதி ஜெயமணி கிருஷ்ணன்
(மனைவி).


## உங்களுக்கு இருதயம் இருக்கின்றதா

அதைக் கவனிக்கும் பொறுப்பை
எங்களுக்கு தாருங்கள்
சத்திர சிகிச்சைகிடையாது!!!
சில ஆயுர்வேத வில்லைகள் மட்டுமே
இந்த வில்லைகள் உங்கள் தடைகளை
கரைத்து விடுகின்றன.
இதற்கான செலவு மிகக் குறைவு
பக்க விளைவுகள் இல்லை
ஏனைய விளைவுகளும் இல்லை



மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
FAIR PHARMA (PVT) LTD
(Manufacturers of Ayurvedic Medicines)
A BOI Approved & ISO 9001:2000 QMS Certified Company

Level 5/East Tower/1C, World Trade Centre, Colombo 01.
Tel: 0094-11-5517897, 5551879, 5558442 Fax: 0094-11-5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website: www.fppvtl.org
AVAILABLE ON LINE

# புலிகளின் மொழி மட்டுமே சிங்கள இனவாதிகளுக்குப் புரிகின்றது

## புத்தொளி நினைவு நிகழ்வில் ரவிராஜ் எம்.பி.



நவாலி,டிசெ.13

சாத்வீகப் போராட்டம் மூலம் தந்தை செல்வா தமிழ்மக்களின் உரிமைகளை வென்றெடுக்க பலமுறையும் முயன்று பார்த்தார். ஆனால், சாத்வீகப் போராட்டத்தை சிங்களவர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. அவர்களுக்குப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரே மொழி தமிழீழ விடுதலைப் புலிகளின் மொழிதான்.

- இவ்வாறு கூறினார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்.

மூத்த எழுத்தாளர் புத்தொளி ந.சிவபாதம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு அவர் பேசினார். அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை தமிழரசுக் கட்சியினுடைய ஆரம்பகால உறுப்பினராகத் தோன்றி சுதந்திர வேட்கையைத் தமிழ்மக்கள் மத்தியில் ஊன்றி வளர்த்து சுதந்திரன் பத்திரிகையிலே தமது எழுத்தாற்றல் மூலம் தமிழ்த் தேசியத்தை அன்றிலிருந்து வளர்த்தெடுத்த பெரியவர்களில் ஒருவர் புத்தொளி ஐயா ஆவார். இவர் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கலந்திருந்த காலத்திலேதான் நான் அவரைச் சந்தித்தேன்.

இன்று எங்கள் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு உன்னதமான முறையில் இறுதிக் கட்டத்தை அடைந்த நிலைக்கு வந்திருக்கின்றது. இங்கு எம்மவர் மத்தியில் பலர் கோடரிக் காம்புகளாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய செயற்பாடுகளை மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதனை அண்மையில் நடந்த தேர்தல் எடுத்துக் காட்டியுள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பிலிருந்து இன்றுவரை 50 வருடங்களுக்கு மேலாக எமது இனம் சாத்வீக வழியிலே, தந்தை செல்வநாயகத்தினுடைய வழிகாட்டலிலே எவ்வளவு போராட்டங்களை நடத்தியிருக்கின்றது. அவைகளில் ஒன்றைக் க [illegible] இந்த சிங்கள சமூகம் ஏற்றுக்கொள்ள வில்லை.

இவர்களுக்கு புரிகின்ற ஒரே மொழிதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் மொழி. இதைவிட வேறு மொழிகளிலே இவர்களுடன் பேசுவதிலே எந்தவிதமான பயனுமில்லை என்பதை இவர்கள் உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் இடம்பெற்ற ஒரு விவாதத்தில் நான் ஆணித்தரமாகச் சொன்னேன் உங்களுக்கு விளங்குகின்ற ஒரே மொழி எங்கள் விடுதலைப் போராளிகளின் மொழிதான். அந்த மொழியில்தான் உங்களுக்குப் பதில்தரவேண்டும். இதைச் செய்வதற்குரிய பலத்தைத் தந்தவர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளே என்று.

இன்று நடக்கின்ற சூழ்நிலையை எடுத்துப் பார்த்தால் தமிழ் மக்களாகிய நாங்கள் ஒரு பொழுதும் தற்கொலைகளை விரும்பியவர்கள் அல்லர். எங்கள் விடுதலைக்காக சாத்வீக வழியிலே 30 வருடங்களுக்கு மேலாக எங்கள் தலைவர் செல்வநாயகத்தின் வழிகாட்டலிலே நாங்கள் சென்று கொண்டிருந்தோம். எங்கள் தலைவர் எத்தனையோ ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார். அவற்றில் ஒன்றைக் கூட அமுல்படுத்த முடியவில்லை. மீண்டும் மீண்டும் எங்களை அடிமைகளாக நினைத்து எங்கள் இனத்தை அழித்தொழிக்கின்ற நிலையிலேதான் தந்தை செல்வா தமிழீழ பிரகடனத்தைச் செய்தார்.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் எம் மக்கள் மத்தியிலே தங்களது உன்னதமான உயிர்களைத் தியாகம் செய்து ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அதன்மூலமாக சிங்களப் பேரினவாதிகளை மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தைக் கூட எங்களுடைய உரிமைகளைத் தருமாறு கோரி நிற்கின்றோம்.

நாங்கள் சமாதானத்தின் வழியிலே செல்வதற்குத் தயார். ஆனால், அதைக் கருவறுக்கின்ற பொழுது விடுதலைப் போராட்டத்தை உங்களுக்குரிய மொழியிலே நடத்துவதற்கு தயார் - என்று கூறினார். (ப-100)




# எய்ட்ஸ் நோயாளருக்கு சிகிச்சை அளிக்க யாழ்ப்பாணத்தில் தனியான நிலையம்

## வைத்தியகலாநிதி என்.சிவராசா வலியுறுத்து

யாழ்ப்பாணத்தில் 'எய்ட்ஸ்' நோயாளர்களுக்கான பூரண சிகிச்சை நிலையம் ஒன்று அவசியம். அரசாங்கமோ அன்றேல் அரச சார்பற்ற நிறுவனங்களோ அதற்கான ஒரு நிலையத்தை அமைக்க முன்வரவேண்டும்.

-இவ்வாறு உலக சுகாதார நிறுவன ஆலோசகர் வைத்தியகலாநிதி என்.சிவராசா குறிப்பிட்டார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த முதலாம் திகதி நடைபெற்றது.

வைத்திய கலாநிதி சிவராசா மேலும் பேசும்போது கூறியதாவது:-

எமக்கும் தமிழகத்திற்கும் இடையில் தொடர்புகள் உண்டு. இந்தியாவில் தமிழகத்திலேயே மிகவும கூடுதலான எய்ட்ஸ் நோயாளர்கள் காணப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் இந்த நோய் அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பம் உண்டு. எனவே, இது குறித்து எம்மிடையே விழிப்புணர்வும் கவனமும் தேவை.

இங்கே வைரஸ் தொற்றுக்குள்ளாகி 300 பேரும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு 12 பேரும் உள்ளனர். அதில் 10 மாதக் குழந்தையும் ஒன்று. இக்குழந்தை இந்நோய்க்கு உட்படக் காரணம் பெற்றோர்களே.

எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய சூழல் இன்னமும் இல்லை. இந்த நோய் வராது நாம் தடுக்க வேண்டுமானால் பெற்றோர்கள், ஆசிரியர்கள் இதற்கு உதவவேண்டும். இந்த நோய் குறித்த அறிவை அனைவரும் பெறல் அவசியம் - என்றார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கணேசலிங்கம் தனது தலைமையுரையில் கூறியதாவது:-

இன்று பல்வேறு வகையான நோய்கள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் மனிதன் இயற்கையை மாற்றியமைப்பதும், அந்த இயற்கை மாறுவதுமே. இவற்றைத் தடை செய்வது கஷ்டமானது. வராமல் தடுப்பதில் தான் அதன் வெற்றிதங்கியுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கம் மனிதனை மனிதனாக மாற்றும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது. பயமற்ற - அவமானமற்ற உலகை உருவாக்குவதே இச்சங்கத்தின் குறிக்கோள்.

யாழ்ப்பாணக் கலாசாரம் சிறந்தது. அதை விடுத்து மேல்நாட்டுக் கலாசாரத்தைக் கைக்கொள்கிறோம். எமது கலாசாரத்தை இறுக்கமாக்கிக் கொண்டால் எய்ட்ஸ் குறித்து கவலைப்பட வேண்டி இருக்காது - என்றார்.

வைத்தியகலாநிதி எஸ்.அருளானந்தம் பேசும் போது கூறியதாவது:-

போர், ஆழிப்பேரலை அனர்த்தங்களில் இருந்து எப்படி எம்மைப் பாதுகாக்க முனைகிறோமோ அதே போன்று எய்ட்ஸ் நோயிலும் இருந்து நாமே நம்மைப் பாதுகாக்க வேண்டும். இதற்குப் பரந்த அறிவு தேவை. எச்.ஐ.வி.தொற்றுக்கு உள்ளானவர்கள் சிகிச்சைகளைப் பெற முன்வருவதில்லை பிறர் தம்மை இனம் கண்டு விடுவார்கள் - சமூகத்தில் தம்மை ஒதுக்கி விடுவார்கள் என்று பயப்படுவது தான் காரணம்.

இந்நோய் உள்ளவர்களைப் புறக்கணிப்பது தவிர்க்கப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இது குறித்து பூரண அறிவைப் பெறுவதுடன், இந்நோய் பரவுவதைத் தடுப்பதிலும் பரவாமல் பாதுகாப்பதிலும் மனிதகுலம் முழு அக்கறைகொள்ளவேண்டும் - என்றார்.

சிறந்த பெண் தொண்டர்களுக்கான விருதினைத் திருமதி ஜி.ஆசிர்வாதம் வைத்திய கலாநிதி சிவராசாவிடம் இருந்து பெற்றுக் கொண்டார். மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ப-111)

# இளமைக்காலம் சவால்கள் நிறைந்தது; கண்டிப்பும் கவனிப்பும் தேவை

## யாழ்.மாவட்ட மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி தெரிவிப்பு

இளமைக் காலம் சவால்கள் நிறைந்தது. இக்காலத்தில் மாணவர்கள் அவதானத்துடன் செயற்படு வது அவசியம். இதனை உரியவர்கள் கண்காணிக்க வேண்டும். இதன் மூலம் தான் சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

- இவ்வாறு முன்னாள் யாழ்.மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா தெரிவித்தார்.

திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்க சைவ சிறுவர் இல்லத்தில் வதியும் சிறுவர்களால் கனடா வாழ் தமிழ்மக்களின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்வு அண்மையில் சைவ சிறுவர் இல்ல மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கே.பி.எஸ்.வரதராஜா மேலும் பேசும்போது கூறியதாவது:-

இளமைக்காலம் சவால்கள் நிறைந்தது. இப்பருவத்தில் மாணவர்கள் அவதானமாக இருப்பது அவசியம். ஏனெனில், இன்றைய மாணவர்கள்தான் வருங்கால சமுதாயத்தைக் கட்டியெழுப்பப் போகின்றவர்கள். அவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கவேண்டும். இங்கே கேள்வி என்பது ஒழுக்கத்தை குறிக்கும் என்பதனை மாணவர்கள் கட்டாயம் அறிந்திருக்கவேண்டும். மாணவர் கல்வியுடன் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கும் போது தான் அவர்கள் தமக்கும் தமது பெற்றோருக்கும் தாம் கல்வி கற்க பாடசாலைக்கும் பெருமை சேர்ப்பவர்களாக விளங்குவார்கள்.

இங்கே புத்தாடை உடுத்து மகிழ்ச்சியுடன் தீபாவளியைக் கொண்டாடிக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றேன். இங்கு கல்வி கற்ற பலர் க.பொ.த.சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளிலும் சித்தியடைந்துள்ளார்கள். மேலும் சிலர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் கேள்விப்பட்டேன். இவற்றைப் பார்க்கும் போதும் கேள்விப்படும் போதும் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவற்றுக்கெல்லாம் வழிகோலிய சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிப்பாளர் சபையினர் மிகவும் பாராட்டுக்குரியவர்கள் - என்றார்.

இக்கொண்டாட்டத்தில் வரவேற்புரையை நிலையச் செயலாளர் சு.பசுபதியும் நன்றியுரையை இல்ல மாணவர் தலைவியும் நிகழ்த் தினர். நிகழ்வில் இல்லத்தில் வதியும் மாணவர்களின் வில்லுப்பாட்டு, கரகாட்டம், நடனம், நாடகம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. (204)

# புகழேந்தியின் ஓவியங்கள் அழகின் வெளிப்பாடல்ல அடக்கு முறைக்கு எதிரான சீற்றம் மிகு குரல்

## நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் பாராட்டு



புகழேந்தியின் ஓவியங்கள் அழகின் வெளிப்பாடல்ல; அடக்குமுறைக்கெதிரான சீற்றத்தின் குரல்.

- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்தார்.

ஓவியர் புகழேந்தியின் 'புயலின் நிறங்கள்' நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் பேசும்போது கூறியதாவது:-

ஓர் இனம் தன்மீது தனக்குள்ள நம்பிக்கையை இழந்துவிட்டால் அந்த இனம் வாழ்ந்ததாக வரலாறு இல்லை.

சில சொற்களை சிலரால்தான் கையாள முடியும். கவிஞர் காசிஆனந்தன் 'மறவர் படை தான் தமிழ்ப்படை' எனப் பாடினார். அது அவரது தமிழுக்கு ஒரு சான்றுகோல். புகழேந்தியின் ஓவியமும் அதுபோன்றதே. ஓவியத்திற்கு உயிர் இல்லை. ஆனால், அது உயிரூட்டும். அது அசைவதில்லை. அது அசைக்கும். ஓவியம் களம் செல்வதில்லை. ஆனால் போராடும். அது அழகையும் குறிக்கும். அவலத்தையும் காட்டும். அதற்கு எடுத்துக்காட்டாக இருப்பதே இவரின் ஓவியங்கள்.

புகழேந்தியின் ஓவியங்கள் அழகின் வெளிப்பாடல்ல. அடக்குமுறைக்கெதிரான சீற்றத்தின் குரல். தமிழர்களின் விடுதலைப் போரை உலகிற்கு உணர்த்திய அவை நெருப்பாய் தலைநிமிர்ந்து நிற்கும் - என்றார்.

ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஆர்.கே.மேனன் தமது உரையில் கூறியதாவது:-

இது ஒரு சர்வதேச மொழிக்கு ஊடான வரலாற்றுப் பதிவு. இந்த ஓவியங்கள் அனைத்துலக மக்களும் தமிழர்களுடைய வரலாற்று நிகழ்வுகளைக் கண்டுகொள்ளக்கூடிய தாகப் படைக்கப்பட்டுள்ளது. ஈழவரலாற்றுப் பதிவுகள் இலக்கிய வடிவங்களாகவே படைப்பாளிகளால் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், ஓவிய வடிவில் படைக்கப்பட்டவை மிகவும் குறைவாகவே உள்ளது.

உண்மையில் இன்று எமது அரசியல் உரிமைப் போராட்டமானது சந்திரிகாவின் ஏமாற்று நடவடிக்கைகளின் நாடகங்களால் கதிர்காமரின் செயற்பாடுகளால் பயங்கரவாதப் போராட்டமாக உலகில் சித்திரிக்கப்பட்டுள்ளது. எமது போராட்டத்தின் உண்மையை உலக மக்களுக்கு விளங்கக் கூடிய மொழியில் காட்டவேண்டிய தேவை உண்டு.

அந்தத் தேவையை இந்தப் படைப்புகள் நிறைவேற்றியுள்ளது. சுதந்திரத்தின் பின் தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர். அவர்கள் மனிதர்கள் இல்லையா எனச் சிந்திக்கவைக்கும் அளவுக்குச் சித்திரவதைகள் இடம்பெற்றன. பயங்கரவாதச் சட்டம், அவசர காலச்சட்டங்களால் நாங்கள் பட்ட இன்னல்களை ஓவியர் புகழேந்தியின் ஓவியங்களால் உணரமுடிகிறது - என்றார்.

ஓவியர் புகழேந்தி பேசும்போது கூறியதாவது:-

எனது ஓவியங்களைப் போரின் காரணமாகத் தமிழர்கள் படும் துயரங்கள் வெளிக்கொணரும் ஊடகமாக வரைந்தேன். போராட்டத்திற்கான பல வடிவங்களில் இதுவும் ஒன்று.

புலிகளுக்கு ஆதரவாக இருப்பவர்கள் பயங்கரவாதிகள் என முத்திரை குத்திய காலம் இருந்தது. அப்போது உலகளாவிய ரீதியில் இந்தப் போராட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என விரும்பினேன். அதன் விளைவாக உலகின் பல்வேறு பகுதிகளில் எனது ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. இதனால் உலக மக்கள் தமிழர்களது போராட்டத்தைப் பற்றி நன்கு அறியக்கூடியதாக இருந்தது. போராட்டக் காட்சிகளையும் தலைவர் பிரபாகரனது உருவப்படத்தையும் வரைந்தேன்.

நான் எந்த மக்களுக்காக இதை வரைந்தேனோ அந்த மக்களிடம் கொண்டுசெல்ல விரும்பினேன். அதன் விளைவே இங்கு நடைபெற்ற கண்காட்சி. இதற்கான அனைத்து உதவிகளையும் செய்த உங்களுக்கு என் நன்றிகள். ஒரு படைப்பாளி பல்வேறு வடிவங்களில் இயங்கவேண்டும். அதன் விளைவே இந்த ஓவிய நூல் - என்றார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் எஸ்.அருந்தவபாலன், பல்கலைக்கழக மாணவி எஸ்.யாழினி விஜயரூபன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானத்திடம் இருந்து யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி க.தேவராசாவும் சிறப்புப் பிரதியை யாழ். பல்கலைக்கழகப் பொருளியல் துறைத் தலைவர் வி.பி.சிவநாதனிடம் இருந்து பல்கலைக்கழக ஊடக வளங்கள் மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸும் பெற்றுக்கொண்டனர். (ப-111)

# மாவீரர் கனவுகளை நனவாக்க அனைவரும் ஒன்றிணையவேண்டும்

தமிழ்மக்களில் ஒருவன் இருக்கும் வரைக்கும் இந்த மாவீரர்களின் நிகழ்வுகள் போற்றப்பட்டு பூசிக்கப்பட வேண்டும். அந்த மாவீரர்கள் எவ்வளவு கனவுகளைச் சுமந்து சென்று களத்திலே வீரகாவியம் படைத்தார்களோ அக்கனவுகளை நனவாக்க நாம் அனைவரும் முன்வரவேண்டும்.

சர்வதேச தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ்.பல்கலைக்கழக மாணவன் விஜி மேற்கூறியவாறு தெரிவித்தார்.

யாழ். பிரதேச கடற்றொழிலாளர் சமாசத்துக்குட்பட்ட பகுதிகளில் வாழ்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை தமிழீழத்துக்கு அர்ப்பணித்து வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் குருநகர் சனசமூக நிலையத்தின் கல்யாண மண்டபத்தில் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்திய விஜி மேலும் தெரிவித்ததாவது:-

இந்த மண்ணையும் மக்களையும் நேசித்து எதிரியோடு களமாடி வீரகாவியமான இந்த மாவீரர் செல்வங்களைப் பூசிக்கின்ற இந்நன்னாளில் அந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் இந்நிகழ்வு மிகவும் முக்கியமானது.

நாம் மூன்று தசாப்த காலமாக ஆயுதம் ஏந்திப் போராடி கிட்டத்தட்ட 3 வருடங்களுக்கு மேலாக சண்டையும் இல்லாமல் சமாதானமும் இல்லாமல் ஒரு அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இதனைப் பயன்படுத்தி எமது மக்களையும் மண்ணையும் அழிப்பதற்கு சிங்கள அரசு சகல வழிகளிலும் திட்டமிட்டு வருகிறது. அரசினால் செய்யப்பட்ட பொய்ப்பிரசாரம் முற்றாக முறியடிக்கப்பட்டு, தமிழ் மக்களது உண்மையான கோட்பாடு இன்று சர்வதேச உலகும் தென்னிலங்கைச் சக்திகளும் புரிந்துகொள்ளக்கூடிய நிலை வந்துள்ளது. அந்த நிலையை உருவாக்கித் தந்தவர்கள் இந்த மாவீரர்கள்.

இந்த மாவீரர்களது கனவுகள் நனவாக வேண்டும். ஒவ்வொரு மாவீரரும் இந்த மண்ணை மீட்பதற்காக - இந்த மக்களைக் காப்பதற்காக தமிழீழத் தேசியத் தலைவரின் தலைமையின் கீழ் இணைந்து செயற்பட்டவர்கள் - என்றார்.

(ப-51)

## பின்னுறுதித் தீர்வை
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

சாந்திநிகேதன் ரூபன் பெண்
கணபதிப்பிள்ளை மகள் கலாமதி
'மூர்த்தியகம்' நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
- வழக்காளி

வழ.இல.மணநீக்கம்/505 எதிர்

சாந்திநிகேதன் ரூபன்
15, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
- எதிராளி

இவ்வழக்கு 2005 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில், வழக்காளியும் வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் சமுகமாகவிருக்கவும் எடுத்துக் கொள்ளப்பட்டபோது,

எதிராளி சார்பில் சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா அவர்கள் எதிராளியிடம் இருந்து தமக்கு எந்தவித அறிவித்தல்களும் கிடைக்காமையால் தாம் இன்று எதிராளி சார்பில் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று தெரிவித்ததற்கமைய ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு,

வழக்காளியின் பிராது, வ1 ஆவணம், எதிராளியால் அணைக்கப்பட்ட மறுமொழி, வழக்காளியால் அணைக்கப்பட்ட மாற்றுமறுமொழி, வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து, வழக்காளி பிராதில் கோரிய நிவாரணத்தைப் பெறத் தகுதியுடையவர் எனக்கண்டு, வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 13.06.2002இல் நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியை வன்ம உறவறுப்புச் செய்து வாழ்கிறார் என்ற காரணத்துக்காக இரத்துச் செய்து வெற்றும்வெறிதுமாகுமென்று கட்டளையிடப்பட்டு இதனால் பின்னுறுதித் தீர்வையிடப்படுகிறது.

வழக்காளிக்கு எதிராளி ரூபா 500,000/- நிரந்தர பிரிவினைப் பணமாக செலுத்த வேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டு இதனால் பின்னுறுதித் தீர்வையிடப்படுகிறது.

வழக்காளி விவாகரத்துத் தீர்வையின் பின் தன் கன்னிப்பெயரான கணபதிப்பிள்ளை பெண் கலாமதி என்ற பெயரைப் பாவிக்கவும், திருமணம் ஆகாத ஒரு பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்க உரிமையும், உரித்தும் உடையவர் என்றும் இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித்தீர்வையிடப்படுகிறது.

வழக்காளி செலவுப் பட்டியலை பதிவாளரிடம் சமர்ப்பித்தால் பதிவாளர் வரியீடு செய்துவரும் தொகையை எதிராளி வழக்காளிக்கு வழக்குச் செலவாக செலுத்த வேண்டுமென்று கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வையிடப்படுகிறது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி மன்றில் பிஸ்க்கால் உத்தியோகத்தர் ஊடாக எதிராளிக்குச் சேர்க்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் எதிராளி ஆட்சேபனை எதுவும் அளிக்காத பட்சத்தில் இப் பின்னுறுதித் தீர்வை முற்றாக தீர்வையாக்கப்படும்.

2005 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 08ஆம் திகதி

மாவட்ட நீதிபதி,
யாழ்ப்பாணம்.

வரைபு
வழக்காளியின் சட்டத்தரணி
*(பவானி சற்குணராசா)*

(43897)(21.16.17)


## செ.ன்.ஜேம்ஸ் பாடசாலையில் எழுத்தறிவூட்டல் வகுப்புகள்

குருநகர்,டிசெ.13

யாழ்.செ.ன்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான எழுத்தறிவூட்டல் வகுப்புகள் மற்றும் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான வகுப்புகளும் நடத்தப்பட்டு வருவதாக யாழ்.செ.ன்.ஜேம்ஸ் மகா வித்தியால அதிபர் த.ஞானப்பிரகாசம்தெரிவித்தார்.

குருநகர் அறிவகம் அமைப்பின் இயக்குநர் ஆசிரியர் செ.சுவைனஸ் மூலமாக எட்டு ஆசிரியர்களின் உதவியுடன் சுமார் 60 மாணவர்களுக்கு பாடசாலை முடிவடைந்ததும் புதன், வியாழக்கிழமைகளில் எழுத்தறிவூட்டல் வகுப்புகள் நடத்தப்படுவதாகவும் -

குருநகர் பிரதேசத்திலுள்ள மெல்லக்கற்கும் மாணவர்களுக்காக சனி, ஞாயிறு தினங்களில் வகுப்புகளும் நடத்தப்பட்டு வருவதாகவும் -

இந்த வகுப்புகளை நடத்துவதற்கான நிதியுதவியினை பிரான்ஸில் வசிக்கும் பி.ஜிம் பிறஷன் சுகந்தி தம்பதியினர் வழங்கி வருகின்றனர் என்றும் - அதிபர் தெரிவித்தார்.

(எ-51)


## உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை பவளமலர்
## உதயநிலாவின் உள்ளத்து நன்றிகள்

பகட்டெதுவுமில்லா பாலகரின் பள்ளியிதன் பவளமலர் வெளியீட்டு பரிசளிப்பு விழாவிற்கு கொட்டிய மழையிலும் வாட்டமிகு சூழலிலும் திட்டமிட்டபடி சுட்டிய நேரத்தில் **தட்டாமல் வந்து** தொடக்கி முத்தான கருத்துக்களைக் கூறி முடிவுறும் வரை நின்ற **திரு.நா.சுவாமிநாதன்** உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆரம்பக் கல்வி, தனித்துவமான சிலேடையூடு சிந்திக்க வைத்த **விகடகவி திரு.மு.திருநாவுக்கரசு** J.P.U.M ஓய்வுபெற்ற நீதிபதி, இன்னுரை வழங்கிய அதிபர் திருமதி **ஆ.இராசரத்தினம்** ஆகிய இனிய விருந்தினர்க்கும் முதன்மைப் பிரதிபெற்ற **அண்ணா நிறுவனத்தினர்க்கும்** எம்முடன் கலந்து பல வழிகளிலும் அன்போடு ஊக்கப்படுத்திய **சகல அன்புள்ளங்களுக்கும்** எமது பாடசாலைச் சமூகச் சார்பில் இதயத்து நன்றிகள்.

**யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையினர்.**

விளம்பர அனுசரணை
தரமான கணனிப் பதிவுகள் அனைத்தும் அழகுற அமைக்கும் வளமான நிறுவனம்
**சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ்**
**இல.183, பலாலிசாலை, கோண்டாவில்.**
T.P. 222 6722
(21.16) (43891)


## ஆளுமை விருத்திச் செயலமர்வு

ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கு யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் திறமை விருத்திச் செயலமர்வு நடத்தப்பட்டு வருகின்றது. முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ். கல்விவலயத்திலுள்ள மூலாதாரப் பாடசாலைகள் மட்டத்தில் இந்த ஆளுமை விருத்திச் செயலமர்வுகள் நடத்தப்படுவதாகவும் - கூறப்பட்டது.

பாடசாலைக் கல்வியில் 11 ஆண்டுகளை நிறைவுசெய்த ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்கள், பாடசாலையை விட்டு நீங்கிய பின்னர் சமூகத்தில் முன்னோடியாக வாழ்வதற்கும் -

எதிர்காலத்திற்குப் பொருத்தமான கல்வி வாய்ப்புகள்மற்றும் வேலை வாய்ப்புகளைத் தேடிக் கொள்வதற்கும் - பரீட்சைகளுக்கு தயக்கமின்றி முகம் கொடுப்பதற்கும் ஏற்புடையதாக இந்த செயலமர்வு நடத்தப்படுகிறது.

முறைசாராக் கல்விப் பிரிவின் வளவாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களின் உதவியுடன் யாழ். கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவம் செயலமர்வை ஏற்பாடு செய்து வருகிறார்.

(எ-11)

## பத்து சாரதிகள் நியமனம்

குருநகர்,டிசெ.13

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் 17 வாகன சாரதிகளுக்கு வெற்றிடமுள்ள போதிலும் சுமார் 10 பேர் மட்டுமே வடக்கு - கிழக்கு பொது நிர்வாக அமைச்சினால் வாகன சாரதிகளாக நியமனம்செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நியமனத்தின் மூலம் சாரதிகள் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

(எ-51)


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14 - 12 - 1935



மறைவு
17 - 11 - 2002

அமரர் **சுப்பிரமணியம் கந்தசாமி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

**திதி: 13-12-2005**

ஆண்டுகள் மூன்றுதான் ஆனாலுமென்ன....
இந்தக் கணமும் எங்கள் மனதிலே...
உங்களைப் பற்றிய நினைவுகள் ... நிகழ்வுகள்...

- குடும்பத்தினர்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

(43880) (24-21-16-17)



# ஏழாண்டு நினைவஞ்சலி



அமரர்
## வடிவேற்கரசு தேவசுதா
(நிதியா)

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1987-02-02 | 1998-12-01 |

திதி:13.12.2005 (பூர்வபக்க திரியோதசி)

*அன்னை என சொல்ல அருமையாய்*
*- வந்துதித்தாய்*
*ஆசையுடன் ஆருயிரே உன்னை அன்புடனே*
*- வளர்த்துவந்தோம்*
*எத்தனை நினைவுடனே ஏற்றம் கண்டோம்*
*- நாமிங்கு*
*அத்தனையும் பொய்யாச்சோ உனை -*
*இழந்து அகலவைகள் தான் ஒடியாச்சோ*
*அப்பாவையும் நானிழந்து ஆருமற்று*
*- வாடுகின்றேன்*
*அருமருந்தே நிதியாவே அம்மாவிடம்*
*- வந்திடுவாய்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்
அம்மா [வைத்தீஸ்வரன்]
வடிவேற்கரசு செல்வராணி

சித்தம்பதி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(சி-46713)(21.17.16)



# இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின்
# இறைவருகை இன்னிசை வழிபாடு

**எதிர்வரும் செவ்வாய் 13.12.2005**
**பிற்பகல் 4 மணிக்கு (புதிய நேரம்)**
**கல்லூரிஅரங்கில் நடைபெறும்**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
மருதனார்மடம், சுன்னாகம்

(43908)(21.16)



# கண்ணீர்க் காணிக்கை



அமரர்
## கலாநிதி அருட்திரு சீ.விநாசித்தம்பி ஐயா
**(ஸ்ரீ நாக வரத நாராயணர் ஆலயம், அளவெட்டி)**

மனிதருள் மாணிக்கம் மறைந்தது
மாண்புடன் வாழ்ந்த மானுடம்
மிகையிலா ஆரூடம்
மீண்டும் காண்பமோயுன் முகம்!

புரியாத வேளையில் நாடிவரும் எம்மை
பூரிக்க வைத்துப் பார்த்த நீங்களா
பொழியும் கவிமழைக்கு ஓய்வெடுத்து
போகும் வழி சொல்லாது போனதென்ன!

அன்புத் தெய்வமெனப் போற்றினோம்
நின் பாதமலர் சொரிந்து ஆழ்ந்த துயரமதை
தேற்றிநின்று! போற்றுகின்றோம் இறைவன் கழல்!
ஐயாவின் ஆத்மா சாந்தியடைய
நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர்
தாழ் பணிந்தோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**றூபா பன்முக வர்த்தகம்**
*104 - A, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**ஸ்ரீ விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்**
*148, கண்டி வீதி,*
*சாவகச்சேரி.*

(43909)(21.16.32)

# தமிழர் சகல உரிமைகளும் பெற்று வாழ்வதற்காகவே மாவீரர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்தனர்

## மனித உரிமை தின விழாவில் அரசியல்துறைப் பொறுப்பாளர்

**வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஏற்பாடு செய்த சர்வதேச மனித உரிமை தின நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் கலந்துகொண்டு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சிறப்புரையாற்றினார். அவரது உரையின் ஒரு பகுதி நேற்றைய 'உதயனில்' வெளியாகியிருந்தது. அந்த உரையின் இறுதிப் பகுதி இது.**

கிளிநொச்சி,டிசெ.13

தமிழர்கள் சகல உரிமைகளும் பெற்று வாழவேண்டும் என்பதற்காகவே மாவீரர்கள் தம்மைத் தியாகம் செய்தனர்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வெளி உலகுக்கு அம்பலப்படுத்தப்பட்ட பிந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம்பெற்ற கொடூரமான படுகொலைகள் ஸ்ரீலங்காவின் தடுப்பு முகாம்களில் எமது இளைஞர், யுவதிகள் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பதற்குச் சிறந்த உதாரணங்களாகும். யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் பின் காணாமற்போன பல நூற்றுக்காணக் கான எமது இளைஞர்கள், யுவதிகள் குறித்து இன்றுவரை எதுவித விசாரணைகளோ அல்லது எதுவித நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை.

### செம்மணி புதைகுழி

இவ்வாறே செம்மணி மனித புதைகுழிகள் மற்றும் யாழ். குடாநாட்டில் கண்டறியப்பட்ட பல புதைகுழிகள் குறித்துச் சர்வதேச மனித உரிமை அமைப்புகளோ அல்லது சர்வதேச சமூகமோ இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாதிருப்பது வேதனைக்குரியது. இவ்வாறாக மனித நேயத்திற்கு எதிராக இன அழிப்பு நடவடிக்கையை எமது மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்துவிட்டபோதே, தமிழ்மக்கள் தம்மைத்தாமே காத்துக்கொள்வதற்காக ஆயுதப் போராட்டத்தில் இறங்கினார்கள்.

இன்று விடுதலை நோக்கில் எமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் தமிழ்த்தேசியத் தலைவரின் வழிநடத்தலின் கீழ் காத்திரமான ஒரு வடிவத்தைப் பெற்றுள்ளது.

எமது மக்களைப் பெரும் இன அழிப்பு நடவடிக்கையில் இருந்து காத்து அவர்களின் சுதந்திரத்துக்காகவும் இற்றைவரை 18 ஆயிரத்துக்கு மேற்பட்ட எமது போராளிகள் அவர்களின் உயிர்களை ஈந்துள்ளார்கள். அவர்களின் இந்த உயிர்த் தியாகமும் உயரிய அர்ப்பணிப்புகளும் தமிழ்மக்கள் தமது தாயகதேசத்தில் சுதந்திரமாக, கௌரவமாக சகல உரிமைகளுடனும் வாழ்வதற்காவே அமைந்தன.

இன்று எமது தலைமைத்துவம் விடுதலை நோக்கிய எமது போராட்டப் பாதையில் மனித உரிமைகள் குறித்தும் சர்வதேச மனித உரிமை சட்டவிழுமியங்களைப் பேணுவது குறித்தும் தீவிர கரிசனையுடன் செயற்படுகிறது.

நாம் மனித உரிமைகள் தொடர்பாக எமக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும்போதெல்லாம் தகுந்த முறையில் விசாரணைகளை மேற்கொண்டு கண்டறிவதற்கும் பேச்சுகளை மேற்கொள்வதற்கும் திறந்தமனதுடனும் மேன்மையுடனும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களை வரவேற்கின்றோம்.

மேலும் தொடர்ச்சியாக சிறுவர்களை ஆட்சேர்ப்பது தொடர்பாக எம்மீது குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன. நாம் இங்குள்ள யதார்த்தமான சூழலையும் போரினால் பெற்றோர்களை இழந்து கடும் பாதிப்புக்கு உள்ளான குழந்தைகளின் நிலையையும், இது குறித்தான எமது நிலைப்பாடுகளையும் ஐ.நா.போன்ற மனித உரிமை அமைப்புகளுக்குப் பிற மனித உரிமை அமைப்புகளுக்கும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றோம்.

இதுதொடர்பான மிகத்தரமான புள்ளி விவரங்களையும் ஐ.நா. போன்ற அமைப்புகளுக்கு நாம் கையளித்திருப்பதோடு, இது தொடர்பான உண்மையைக் கண்டறிவதற்கு அழைப்பும் விடுத்திருந்தோம்.

இப்பிரச்சினை தொடர்பாகத் திறந்த மனதுடனும் பேச்சுக்களை மேற்கொண்டிருந்தோம். கடந்த வாரம்கூட நாம் சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலருடன் பேச்சுக்களை மேற்கொண்டிருந்தோம். எமக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து உண்மைநிலையை அறிந்து கொள்ளவும் வரவேற்று இருந்தோம். தொடர்ச்சியான மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நா. அமைப்புகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பிற சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் எமது தாயகப் பகுதியின் மனித உரிமை மேம்பாடுகள் குறித்துப் பேச்சுக்களை மேற்கொண்டிருந்ததோடு, பல்வேறு செயல் திட்டங்களையும் அவர்களோடு இணைந்து மேற்கொண்டுள்ளோம்.

கடந்தகால இனப்பிரச்சினைக்கான பேச்சுக்களின் போதும் நாம் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை மேற்கொண்டிருந்ததுடன் மனித உரிமை மேம்பாட்டுக்கான செயல் திட்டங்களையும் முன்னெடுத்திருந்தோம்.

எமது இடைக்காலத் தன்னாட்சிக் கட்டமைப்பு வரைபும் நான்காவது பிரிவில் தரப்பில் மனித உரிமைகள் தொடர்பான எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி இருக்கிறோம்.

சமாதான காலத்தில் மட்டுமல்லாது யுத்தகாலங்களின் போதும் நாம் போர் நடவடிக்கைகளிலும் போர்க் கைதிகள் தொடர்பான விடயங்களிலும் ஜெனீவா உடன்படிக்கைகளுக்கமைவாக எமது செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தோம்.



இன்று எமது தாயகப் பகுதிகளில் எம்மால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் பல்வேறு சர்வதேச தொண்டர் அமைப்புகள் சுதந்திரமாக தமது பணிகளை ஆற்றி வருகின்றனர்.

அவர்களுக்கு நாம் எப்போதும் உண்மை நிலையைக் கண்டறிந்து கொள்ளுவதற்கும் சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ளவும் எமது ஒப்புதல்களை வழங்கி இருந்தோம்.

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினத்தை நினைவு கூரும் நாங்கள் அரச பயங்கரவாதத்தினால் கொல்லப்பட்ட எமது ஆயிரக்கணக்கான மக்களையும் காணாமற்போன மக்களையும் பல நூற்றுக் கணக்கான எமது உறவுகளையும் நினைவு கூருவதோடு, ஒட்டுமொத்த மனித உரிமைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தாயகத்துக்கான எமது உரிமையைப் பெற்றுக்கொள்ளும் சுயநிர்ணய உரிமைக்காக நாம் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் உறுதி எடுத்துக்கொள்வோம்.

இன்று மேற்குலகில் வாழ்ந்து வரும் மக்களைப் போலவே நாமும் எமது முழுமையான மனித உரிமைகளை அனுபவிக்கும் உயரிய தேசிய பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக்கொள்ளும் உரிமையுடைய கௌரவமான மக்களாக வாழ ஒன்றிணைவோம் - என்றார். (எ-12-204)

---

# கடல் கொந்தளிப்பினால் மீன்பிடி வலைகளுக்குச் சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

பொன்னாலை கடற்பரப்பில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட புயல்காற்றுடன் கூடிய கடல் கொந்தளிப்புக் காரணமாக அப்பகுதிக் கடலில் வீசப்பட்டிருந்த மீன்பிடிவலைகள் அனைத்தும் சேதமடைந்துள்ளன.

மேற்படி கடற்பரப்பில் மூளாய் மேற்கு நாரயணன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் கடற்றொழில் புரிந்து வருகின்றனர். இவ்வாறு தொழில் புரிந்துவரும் மீனவர்களின் வலைகளே கடல் கொந்தளிப்புக் காரணமாக அழிவைச் சந்தித்துள்ளன என்று மேற்படி சங்கம் விடுத்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வலைகள் அழிவடைந்ததை அடுத்து இப்பகுதி மீனவர்கள் தற்போது தொழில் செய்ய முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று நாராயணன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.பொன்னையா தெரிவித்தார்.

எனவே, தமது இக்கட்டான நிலையை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கவனத்தில் எடுத்து மீனவர்கள் மீண்டும் தமது தொழிலை மேற்கொள்வதற்கு உதவிகளை வழங்கவேண்டும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-203)

# சுகாதாரப் பகுதியினர் வழங்கிய அறிவுறுத்தல்களை சில உணவகங்கள் செவி மடுக்கவில்லையாம்

## பாவனையாளர் தரப்பில் விசனம் தெரிவிப்பு

குருநகர்,டிசெ.13

உணவகங்களில் உணவுகளைச் சுகாதார முறைகளில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என உரிய திணைக்களத்தினால் உணவக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், குருநகர் மற்றும் யாழ். நகரப் பகுதிகளில் இயங்கிவரும் சில உணவகங்களில் இந்த அறிவுறுத்தல்கள் உரிய முறையில் பின்பற்றப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட உணவகங்களில் உணவு உண்போர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

உணவகங்களில் உணவினைப் பரிமாறும்போது சிப்பந்திகள் கைகளால் உணவுப் பொருள்களைத் தொடாமல் அதற்குரிய சாதனங்கள் (Forceps) மூலமே உணவுப் பொருள்களை வழங்கவேண்டும் என்பது உணவக உரிமையாளர்களுக்கு யாழ். சுகாதாரப் பகுதியினர் வழங்கிய பணிப்புரையாகும்.

ஆனால், யாழ். நகரிலும் குருநகர் பகுதியிலும் உள்ள சில உணவகங்களில் இந்த நடைமுறை இதுவரை பின்பற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. உணவுப் பொருள்களின் விலைப்பட்டியல்கூட உணவகங்களில் வைக்கப்பட்டிருக்கவில்லை என வாடிக்கையாளர் தெரிவிக்கின்றனர்.

மேலும் குருநகர் பகுதியில் இயங்கி வரும் சில பலசரக்குக் கடைகளில் திகதி காலாவதியான இனிப்புப் பண்டங்கள், சுவையூட்டப்பட்ட பிஸ்கட் வகைகள் மலிவான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்றும் -

இதுவிடயமாக யாழ். சுகாதாரத் திணைக்களம் மற்றும் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியது அவசியம் என்றும் - இதுவிவகாரத்தில் காலதாமதம் காட்டப்படின் குருநகரில் வயிற்றோட்டம், வயிற்றுளைவு ஆகிய நோய்கள் உருவாகும் சூழ்நிலை ஏற்படும் என்றும் குருநகர்ப் பகுதி நலன்விரும்பிகள் தெரிவித்தனர். (எ-51)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஏற்பாட்டில் பண்டத்தரிப்பில் இம்முறை தையல் பயிற்சி

வலி.தென்மேற்கு,டிசெ.13

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப்பிரிவில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் 2006ஆம் ஆண்டுக்கான இலவச தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சிநெறி எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இம்முறை மேற்படி பயிற்சிநெறி பண்டத்தரிப்பில் நடத்தப்படவிருப்பதாகவும் 25 யுவதிகள் இப்பயிற்சிநெறியில் அனுமதிக்கப்படவுள்ளனர் என்றும் -

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

பயிற்சிபெறுபவர்களுக்குத் தினமொன்றுக்கு 50 ரூபா வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் -

பயிற்சி முடிவில் பரீட்சை நடத்தப்பட்டு சித்திபெறுபவர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-135)



**பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்குக் கல்வி உதவிக்கான கொடுப்பனவை வழங்கும் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் மாணவனுக்கு கொடுப்பனவைக் கையளிப்பதை முதலாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டு உதவி பெறவந்த மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன்)**

# 70 மாணவருக்கு நிதியுதவி

வலி.வடக்கு,டிசெ.13

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பெற்றோர்களை இழந்த மற்றும் குடும்பத்தில் உழைப்பாளர்களை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த 70 மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

போதிய வருமானம் இன்றி கல்விச் செயற்பாடுகளைத் தொடரமுடியாது கல்வியை இடை நிறுத்தும் நிலையில் காணப்பட்ட பிள்ளைகளுக்கே எட்டு மாதங்களுக்கு மாதாந்தம் ஐந்நூறு ரூபா வீதம் இந்நிதியுதவி வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

முதற்கட்டமாக இரண்டு மாதங்களுக்கான கொடுப்பனவாக ஆயிரம் ரூபா நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. (எ-86)

# கடும் மழை பாதித்த குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள் அன்பளிப்பு

நல்லூர், டிசெ.13

அண்மையில் பெய்த மழை வெள்ளத்தால் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 6 ஆயிரத்து 666 குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினர் உணவல்லாத பொருள்களை வழங்கியுள்ளனர்.

மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 14 பிரதேச செயலர் பிரிவுகளையும் சேர்ந்த 6 ஆயிரத்து 666 குடும்பங்களுக்கே இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 729 குடும்பங்களுக்கும், நல்லூரில் 572 குடும்பங்களுக்கும்,கரவெட்டியில் 49 குடும்பங்களுக்கும், பருத்தித்துறையில் ஆயிரத்து 677 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாயில் 690 குடும்பங்களுக்கும், சங்கானையில் 25 குடும்பங்களுக்கும், சாவகச்சேரியில் 308 குடும்பங்களுக்கும், வேலணையில் ஆயிரத்து ஐந்து குடும்பங்களுக்கும், ஊர்காவற்றுறையில் 116 குடும்பங்களுக்கும், கோப்பாயில் 848 குடும்பங்களுக்கும், தெல்லிப்பழையில் 175 குடும்பங்களுக்கும், காரைநகரில் 40 குடும்பங்களுக்கும், நெடுந் தீவில் 410 குடும்பங்களுக்கும், உடுவிலில் 22 குடும்பங்களுக்கும், இவ்வாறு உணவல்லாத பொருள்களான சமையல் உபகரணங்கள், சவர்க்காரம், படுக்கை விரிப்புகள், குழந்தைகளுக்கான பொருள்கள் என்பன வழங்கப்பட்டன எனத்தெரிவிக்கப்பட்டது.

(எ- 111-204)

## புத்தொளி நினைவாக மரக்கன்று நடப்பட்டது

எழுத்தாளர் அமரர் புத்தொளியின் ஞாபகார்த்தமாக மரக்கன்று ஒன்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினா ந.ரவிராஜினால் ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலையில் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

புத்தொளியின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த வாரம் இந்தப் பாடசாலையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மரக்கன்றை நட்டுவைத்தார்.

(எ-100)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 10 1921 — மறைவு 16 12 2002

நவற்கிரியூர்

**திருமதி சிவப்பிரகாசம் தங்கம்மா**

திதி:13.12.2005

மூன்றாண்டு என்ன மூவாயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமோ உங்கள் நினைவுகள்
மலர்ந்த முகத்துடனும் மாசற்ற நெஞ்சுடனும்
மகிழ்வுடனே வாழ்ந்தீர்களே!
நீங்கள் மறையவில்லை அம்மா
எங்கள் கண்முன்னே எப்போதும்
எம்முடனே வாழ்கின்றீர்கள்.

61, பலாலி வீதி,
திருநெல்வேலி. (4387 )(51 -குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 - 05 - 1961 — மறைவு 24 - 12 - 2004

**திருமதி விஜயரட்ணம் சாந்தினிதேவி (சாந்தி)**

திதி:13.12.2005

பரிவுடனும் பாசத்துடனும் பண்புடனும்
எம்மை வளர்த்த அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு
நகர்ந்தாலும் உங்கள் நினைவலைகள்
என்றும் எங்கள் இதயத்தை விட்டகலாது.
உங்கள் ஆத்மசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன்
திருவருளை வேண்டுகின்றோம்.

34/2, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். -குடும்பத்தினர்.

(43866)(51-)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 - 01 - 1964 — மறைவு 13 - 12 - 2003

**சாந்தினி ஆனந்தராஜா B.A.**

(இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய உயர் தர வகுப்பாசிரியர்)

உம் கலகலத்த பேச்சு காதினிலே ஒலிக்குதம்மா!
உம் பிரிவு தாங்காமல் பெற்றவர்கள் தவிக்கின்றார்கள்
ஒருமுறை ஏனும் தரிசனம் காட்டுமம்மா!
உன் குழந்தைகள் கண்டு உள்ளம் மகிழட்டும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மயிலங்கூடல்,
இளவாலை. (43801)(51) -குடும்பத்தினர்.

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லத்துரை பாலசிங்கம்
(...PILIA-IREO உரிமையாளர்)
...றம் : 08.09.1933
...வு : 17.12.2002
... 13.12.2005



அமரர் பாலசிங்கம் ஐங்கரன்
தோற்றம் : 09.12.1971
மறைவு : 17.12.2002
திதி: 13.12.2005



அமரர் சண்முகம் சிவகுமாரன்
தோற்றம் : 24.02.1963
மறைவு : 17.12.2002
திதி: 13.12.2005

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்,
எங்களுக்கு நல்வழிகாட்டிய உத்தமரே!
எமக்கு இனிய வாழ்வளித்த தெய்வங்களே!
எங்களை சிறப்புற வாழவைத்த தெய்வங்களே!
உங்கள் இனிய முகம் எங்கள் நெஞ்சைவிட்டு
என்றென்றும் அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தலங்காவலனை
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

(43878)(52-)

"செல்வத்துரைபதி", 61, பலாலி வீதி,
திருநெல்வேலி. -குடும்பத்தினர்.

### பேராசிரியர் சபா. ஜெயராசா சாடுகிறார்

# தமிழ்ப் பிரதேசங்களில் கல்வி நிலை

# வீழ்ச்சி கண்டதாகக் கூறப்படுவது தவறு!

## பாடசாலைகளுக்கான வளங்களைக் கருத்தில் எடுக்காமல் செய்த ஆய்வின் விளைவு அது

வலி.கிழக்கு,டிசெம்பர்13



**தமிழ்ப் பிரதேசங்களில் கல்வி நிலை வீழ்ச்சி கண்டிருப்பதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது. சம்பந்தப்பட்ட ஆய்வுகள் உரிய முறையில் செய்யப்படவில்லை என்பதே உண்மை. - இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வியியற்றுறை பேராசிரியர் சபா.ஜெயராசா.**

கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையினால் நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு நடத்தப்பெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வர்த்தக வங்கியின் முகாமையாளர் எஸ். ரவீந்திரா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் பேசும் போது மேலும் கூறியதாவது:-

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் பரீட்சையில் சித்திபெற்ற பெறுபேறுகளை மட்டுமே பிரதான அம்சமாக மதிப்பீட்டில் வைத்து இந்த ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஆய்வின்போது தமிழ்ப் பிரதேசங்களில் கல்வி வீழ்ச்சி கண்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது சரியானது அல்ல.

இன்று தென்னிலங்கைப் பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கும் உள்ளீடுகள், உயர் வளங்கள் தமிழ்ப் பிரதேசங்களின் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்த நிலையிலும் மிகக் குறைந்த வளங்களுடன் தமிழ் மாணவர்கள் பல சாதனைகளைப் படைக்கின்றார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களின் பாடசாலைகளுக்குக் கிடைக்கும் வளங்களை ஏனைய பிரதேசங்களின் பாடசாலைகளுக்குக் கிடைக்கும் வளங்களுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவு.

குறிப்பாக இடவசதிகள் அற்ற நிலையிலும் தளபாடங்கள் மற்றும் பௌதிக வளங்கள் குறைந்த நிலையிலும் எத்தனையோ இடர்பாடுகளுக்கு மத்தியிலும் கல்வியில் எமது மாணவர்கள் எதிர் நீச்சல் போட்டு வருகின்றார்கள். அந்த நிலையில் வைத்துப் பார்க்கும்போது தமிழ்ப் பிரதேச மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சி கண்டுவிட்டதாகக் கூறுவது ஏற்புடையதல்ல. தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகளுக்கு வளங்கள் குறைவாகவே உள்ளன என்ற தகவலை ஆய்வாளர்கள் வெளியில் கூறினால் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பல வேண்டாத விளைவுகளை ஏற்படுத்திவிடலாம் என்று கருதுவதாலும் அரசும், கல்வி அமைச்சும் பல்வேறு நெருக்கு தலுக்கு ஆளாக நேரிடும் என்ற காரணத்தினாலும் இவை மறைக்கப்பட்டுவிட்டன. எழுந்தமானமாக வெறும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆய்வுகள் நடத்தப்பட்டு முடிவுகள் தெரிவிக்கப்படுகின்றன.

கல்வியில் தமிழன் என்றைக்கும் வீழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. இப்போதும் கல்வியில் முன்னிலையில்தான் இருக்கின்றான்.

**புலமைப்பரிசில் பரீட்சைகள்**

இலங்கையில் புலமைப்பரிசில் பரீட்சைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி மாணவர்கள் மத்தியில் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்திய




பெருமை இலவசக் கல்வியின் தந்தை கே.சி. டபிள்யூ.கன்னங்கராவையே சாரும். அவரே கிராமங்களில் மகாவித்தியாலயங்களை நிறுவி வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும் தமது திறமையினை வெளிக்கொணர வசதியும் வாய்ப்பும் செய்தார்.

அன்று புலமைப்பரிசில் பரீட்சைகள் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புகளுக்கான வாயில்களைத் திறக்கும் பரீட்சைகளாகவே இருந்தன. இன்றைக்கு அப்பரீட்சைகள் மாணவர்களுக்கு உள நெருக்கடிகளை ஏற்படுத்தும் பரீட்சைகளாக மாறியுள்ளன.

ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொணரப் பொருத்தமானவையாக அமையவில்லை என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

மாணவர்கள் மத்தியில் இப்பரீட்சை பதற்றத்தை ஏற்படுத்துவதாகவே பெரிதும் காணப்படுகின்றது.

இந்தப் புலமைப்பரிசில் பரீட்சை எமது பிரதேசத்தில் பாடசாலைகளுக்கு இடையில் ஒரு போட்டி நிலையை உருவாக்கியுள்ளது. ஆசிரியர்களும் அதிபர்களும் தமது முழு ஆற்றலையும் பயன்படுத்தி முடிந்தவரை மாணவர்களைப் பரீட்சையில் சித்தியடைய வைக்கின்றனர். இம்முயற்சிக்கு பெரும் பணியாற்றும் இவர்களைப் பாராட்ட வேண்டும்.

**மொழி ஆட்சி**

இதேவேளை, எமது மாணவர்கள் எமது மொழியினை செம்மையான முறையில் கற்பது எழுதுவது மிகவும் குறைந்து வருகின்றது. உயர்கல்வி கற்கும் மாணவர்கள் எழுதும் கடிதங்கள் கட்டுரைகளில் இலக்கணப் பிழைகள் நிறையவே உண்டு. ழ,ல,ள,ந உச்சரிப்பு முறையையும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளை, வித்தியாசங்களைப் புரிந்துகொள்ளாமலும் எழுதி வருகின்றார்கள். மாணவர்களுக்கு சிறுவயதில் இருந்தே மொழி வளப் பயிற்சி மற்றும் சொல்லாட்சிப் பழக்கத்தைச் சரிவரக் கற்பிக்கவேண்டும் - என்றார் பேராசிரியர்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் எஸ்.இரவீந்திரா தமது உரையில் கூறியதாவது :-

மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் மட்டுமல்லாது பல பரீட்சைகளிலும் சித்திபெற்று ஆற்றல்மிக்க பிரசைகளாக வளர வேண்டும். அத்தோடு நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்களாகவும் சமூக மேம்பாட்டுக்காக உழைக்கும் மனப்பலம் கொண்டவர்களாகவும் திகழவேண்டும். - அவற்றுக்கான அத்திபாரம் கீழ் வகுப்புகளில் இருந்தே மாணவர் மனங்களில் விதைக்கப்படவேண்டும்.

கடந்த வருடங்களைவிட புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் நிலையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அடுத்த வருடத்தில் எமது கௌரவிப்பு விழாவுக்கு அழைக்கப்படும் மணவர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என நம்புகிறோம். மாணவர் கல்வி மேம்பாட்டில் எமது வங்கி அதிக அக்கறை கொண்டுள்ளது.

எமது வங்கி பல புதிய சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் கையடக்கத் தொலைபேசிக்கு இரகசிய இலக்கம் ஒன்றின் மூலம் ஆயிரம் ரூபாவரை பணத்தைத் தமது கணக்கிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வசதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச ஊழியர்களின் சம்பளத்தை நேரடியாக வங்கிக்குப் பெற்று என்.ரி.என். மூலம் பணம் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் வங்கியில் பொருத்தப்பட்டிருக்கும் பணம் பெறும் இயந்திரம் மூலம் 24 மணி நேரமும் பணத்தைப் பெறமுடியும் - என்றார்.

வங்கியின் உதவி முகாமையாளர் எம். ஜெகதீஸ்வரன், வங்கியின் சந்தைப்படுத்தல் பிரதிநிதி ஜி.எஸ்.ஆர்.கதிர்காமர், உத்தியோகத்தர் எஸ்.திவாகர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

'உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இறுதியில் மாணவர்களுக்கான பரிசளிப்பு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான பெற்றோர்களும் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

(அ-180)

## யாழ்.செயலகத்தில் இன்று திட்ட மீளாய்வுக் கூட்டம்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட மீளாய்வுக் கூட்டம் இன்று செவ்வாய் கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இத்திட்டத்துடன் தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்துகொள்வர்.

(எ-203-204)



இம்மாத முற்பகுதியில் யாழ்ப்பாணம் வருகைதந்த இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதி அதிவண. மாரியோ சாறியோ ஆண்டகை சில்லாலை பங்குக்கும் விஜயம் செய்திருந்தார். சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்திற்கு வருகைதந்த இவருக்கு ஆலயப் பரிபாலன சபையினராலும் பங்கு மங்களாலும் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் இது. தமிழ்ப் பாரம்பரிய முறைப்படி அவர் ஆராத்தி எடுத்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்த ரநாயகம் ஆண்டகையும் படத்தில் காணப்படுகின்றார்.(படம் : வலி.தென்.மேற்குச் செய்தியாளர்)

## வலி.மேற்கு நெல் வயல்களில் இலைச்சுருட்டிப் புழுவின் தாக்கம்

வலி.மேற்கு, டிசெ.13

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேசத்தில் நெற்பயிர்களுக்கு இலைச்சுருட்டி புழு, கபிலநிறத் தத்தன் ஆகிய கிருமிகளின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் வி.செல்வநாயகம் கேட்டுள்ளார்.

அராலி, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள பெரும்பாலான வயல் நிலங்களிலேயே இலைச்சுருட்டிப் புழுவின் தாக்கமும் கபிலநிறத் தத்தனின் தாக்கமும் அதிகரித்துள்ளது என்று தெரிவித்த விவசாயப் போதனாசிரியர், இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகளை உடனடியாகத் தம்முடன் தொடர்புகொண்டு நெற்பயிர்களைக் காப்பாற்றுவதற்கு உரிய கிருமிநாசினிகளைப் பாவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வெள்ளத்தினால் இப்பகுதியில் உள்ள நெற்பயிர்கள் கூடுதலாக அழிவடைந்துள்ளன என்றும் -

எனவே, மேலும் இந்த இரண்டு நோயினாலும் நெற்பயிர்களுக்கு அழிவு ஏற்படாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(எ-175)

## விவசாயிகள் பெறும் ஓய்வூதியத்தை ரூ.3 ஆயிரமாக உயர்த்தக் கோரிக்கை

### மானிப்பாய் சம்மேளனம் ஜனாதிபதிக்கு மகஜர்

வலி.தென் மேற்கு, டிசெ.13

விவசாயிகள்ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தற்போது வழங்கப்பட்டுவரும் ஆயிரம் ரூபா மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவை மூவாயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோரியுள்ளது.

மேற்படி சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் சி.பொ.ம.க.முதலியார்இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகள் நீண்டகாலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தங்கள் பதவிக் காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை எமது பிரதேசத்திலுள்ள நெற்செய்கையாளர்களுக்கும் மற்றும் மரக்கறிச் செய்கையாளர்களுக்கும் நன்மையளிக்கும் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தை எமது பிரதேசத்து விவசாயிகளும் சரிவரப் பெற்றுப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்பட்டுவரும் ஆயிரம் ரூபா மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவை மூவாயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

வாழ்கைச் செலவுகள் மிகவும் அதிகரித்துள்ள இந்தக் காலகட்டத்தில் விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவையும் அதிகரிக்கவேண்டும் என்றும் எமது சம்மேளனம் விவசாயிகள் சார்பில் தங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்று அதில் உள்ளது.

(எ-135)

## சுகாதாரத் திணைக்கள வருடாந்த ஒன்றுகூடல்

குருநகர், டிசெ.13

யாழ்.பிரதி மாகாண சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-51)


## மீண்டும் குறைந்த கட்டணத்தில்
## சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை.

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், நோர்வே, டென்மார்க், இத்தாலி, லண்டன், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு ஒரே கட்டணம். கட்டணம் Kg 1300/= மட்டும்.

ஒரு பொதியின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும். மேலதிக கட்டணங்கள் எதுவுமின்றி குறிப்பிட்ட விலாசத்தில் மூன்று நாள்களில் ஒப்படைக்கப்படும்.
உங்கள் உறவினர்களுக்கு அனுப்பவேண்டிய உடை, உணவு, அலங்காரப்பொருள்கள், வீடியோ நாடாக்கள், கடிதங்கள் ஆகிய வற்றை எமது ஸ்தாபனம் மூலம் அனுப்பி வைக்கலாம்.

தொடர்புகளுக்கு:
**RAINBOW TRAVELS &TOURS**
32 1/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021222 3237, 0777 328219
(அபிநயா நகைமாடத்துக்கு மேல்)

குறிப்பு: (C/46734)
வடமராட்சி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க எமது பொதிகள் சேவையை பின்வரும் எமது இணை ஸ்தாபனங்களுக்கு விஸ்தரித்துள்ளோம்.

| | |
|---|---|
| வல்வெட்டித்துறை<br>அமுதம் பில்டேர்ஸ்<br>கிழக்கு றோட், வல்வெட்டித்துறை.<br>தொலைபேசி: 021 226 3575 | பருத்தித்துறை<br>றிதேஸ் என்றபிறைஸ்<br>பிரதான வீதி, பருத்தித்துறை.<br>தொலைபேசி :021 2264224 |
| நெல்லியடி<br>நியூ அம்பிகா ஸ்ரோர்ஸ்<br>152, மெயின் வீதி, நெல்லியடி.<br>தொலைபேசி: 021 226 4197 | அச்சுவேலி<br>சபா தொலைத் தொடர்பு நிலையம்<br>பிரதான வீதி,<br>அச்சுவேலி. தொலைபேசி :021 4591787 |


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆசானும் வழிகாட்டியுமான
"முத்தமிழ் வித்தகர்"
**அ.பொ.செல்லையா**
(ஓய்வுபெற்ற அதிபர், யா/மீசாலை விரசிங்கம் மகாவித்தியாலயம்)
அவர்கள் 09.12.2005 இல் கனடாவில் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மனம் வருந்துவதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஏசியன் கல்வி நிலையம், மீசாலை.
(43888)(32-34-11)

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 09.12.2005 அன்று கனடாவில் காலமான யா/மீசாலை விரசிங்கம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்
**அமரர் அ.பொ.செல்லையா**
அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் இழப்பால் தவிக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

"புத்தூர் சந்தி",
மீசாலை வடக்கு,
மீசாலை. (43906)(32-34-11)
கேசவன் மாஸ்ரர்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் முன்னாள் செயலாளரும் யா/மீசாலை விரசிங்கம் ம.வித்தியாலய முன்னாள் அதிபருமான
**லயன்**
**அ.பொ.செல்லையா**
அவர்கள் 09.12.2005 இல் கனடாவில் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் குடும்பத்திற்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மசாந்திவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

(43905)(32-34-11)
லயன்ஸ் கழகம்,
சாவகச்சேரி.


### சர்வதேச உயர்கல்விக்கான வழிகாட்டற் கருத்தரங்கு

சர்வதேச தரம் வாய்ந்த பட்டக் கல்விகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வழிகாட்டற் கருத்தரங்கு ஒன்று எமது நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இடம் : IIS பிரதான மண்டபம்
காலம்: 15.12.2005 வியாழக்கிழமை
காலை 10.00 மணி

BIT, NCC
போன்ற கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு விசேட கட்டணச்சலுகைகள் வழங்கப்படவுள்ளன

மேலதிக விவரங்களுக்கு :
IIS CITY CAMPUS
\# 181, Navalar Road,
Jaffna.
T.P: 021 222 8060

### விற்பனைக்கு

அரிசி ஆலை ஒன்றிற்கு தேவையான அனைத்து இயந்திரங்களும் விற்பனைக்குண்டு. (பொலிசர், சோமசிறி, நம்பர்-1 குன்னர் இவற்றிற்கு தேவையான மோட்டார், அவியல் தொட்டி)
தொடர்புகளுக்கு:
**வே.புண்ணியமூர்த்தி,**
சென்ஜேன்ஸ் சேர்ச் லேன், மாவிட்டபுரம்.
தொ.பேசி. 077 9124073.

### கோபாலையரின்

தமிழ் இலக்கணப் பேரகராதி
17 தொகுதிகள்
**சேமமடு பொத்தகசாலை**
UG.52, பீப்பிள்ஸ் பார்க்,
கொழும்பு-11,
011-2331475 பெற்றுக்கொள்ளலாம்.


## ஊரிக்காட்டில் விரைவில் கிராம அபிவிருத்திச் செயலகம்

யாழ்ப்பாணம், டிசெ.13

வல்வெட்டித்துறை - ஊரிக்காடு நாவலடிப் பகுதியில் கிராம அபிவிருத்திச் செயலகம் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்ட நிக்கொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் க.நவரத்தினராசா உடுப்பிட்டி பிரதேச முன்னேற்றச் சங்கத்தின் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள் கட்டுமானத் திட்டத்தின் 'ராப்' (TAARP) நிதி ஒதுக்கீட்டின் கீழ் இது விரைவில் நிர்மாணிக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ-185)

## வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 15 பேருக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ்.சமுர்த்தி மகா சங்கத்தினால் சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், யாழ்.பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட 15 பயனாளிகளுக்குத் தலா ரூ.50 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

இந்த பயனாளிகளுக்கு முதற்கட்டக் கொடுப்பனவான ரூ.20 ஆயிரம் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளியன்று யாழ் நகர்கிழக்கு சமுர்த்தி வங்கியின் பிரதான மண்டபத்தில் மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் என்.கீழுமன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் எம்.பற்றிக் டிறஞ்சனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிரதேச செயலகக் கணக்காளர் வி.வேல்நிதியும் நிர்வாக உத்தியோகத்தர் எம்.பாலசுப்பிரமணியமும் கலந்து கொண்டனர். (எ-190)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.அடைக்கல அன்னை ஆலயப் பங்கின் வளர்ச்சியிலும் செயற்பாட்டிலும் முன்னின்று உழைத்த
**J.E. துரைசிங்கம் கிறிஸ்தோப்பர்**
அவர்கள் காலமானதையிட்டு எமது அஞ்சலியையும் உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி யாழ். O.L.R ஆலயத்தில் இன்று 13.12.2005 காலை 6.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

பங்குத்தந்தை,
அருட்பணிச் சபை, பங்குமக்கள்.
(43915)(32-34-11)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் J/102 பிரிவு, கிராம அலுவலராகக் கடமையாற்றும் திரு.வை.சந்திரசேகரம் அவர்களின் அன்புத் தாய்
**திருமதி வைரமுத்து பவளம்**
அவர்கள் காலமான செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
நல்லூர். (சி/46738)(32-34-11)
பிரதேச செயலாளரும்,
அனைத்து அலுவலர்களும்.

## துயரடைகின்றோம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி திரு.பா.தனபாலன் (கல்வியும் தரமேம்பாடு) அவர்களின் பாசமிகு தந்தை 'முற்றற்ற முதுசம்'
**அமரர் இராசகாரி பாலசுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற அதிபர்)
09.12.2005 அன்று காலமானார். அவர்களின் பிரிவுத் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினரோடு நாமும் இணைகிறோம்.

பீடாதிபதி, மேலதிக பீடாதிபதி, உப பீடாதிபதிகள்,
யாழ்ப்பாணம் கல்வியியலாளர்கள், பதிவாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி. கல்விசாரா ஊழியர்கள்,
(43892)(32-34-11) முகிழ்நிலை ஆசிரியர்கள்.

## நெஞ்சகலா நினைவுகளில் 31 நாள்கள்



எமது குடும்பத்தின் குலவிளக்கு
அமரர்
**புஷ்பராணி இராஜரட்ணம்**

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 13-02-1927 | 13-11-2005 |

"நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்"
II தீமோத்தேயு 4:7

என்றும் அன்பு மறவாத
- குடும்பத்தினர்.

தேவாலய வீதி,
சங்கானை.
(43904)(42.32.34.11)

## கண்ணீர்க் காணிக்கை



11.12.2005 இறைவன் பாதம் சென்ற எங்கள் குருநாதரான
**அருட்கவி விநாசித்தம்பி**
ஐயா அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாகவரத நாராயணர் பெருமாளை வேண்டுகின்றோம்.

(C/46745)(42.32.34.11)

சீமாட்டி புடவையகம்,
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
**OCEANICK IMPEX**
192, Main Street,
Colombo - 11.

## தமிழீழ வைப்பகம்
## அறிவித்தல்

தமிழீழ வைப்பகத்தின் எக்கிளையிலாவது 01.10.2003 - 31.03.2004 ஆம் நாள் வரையான காலப் பகுதியிலும் (ஒரு வருட கால அடகுக் கடன் சேவை), 01.07.2004 - 31.12.2004ஆம் நாள் வரையான காலப் பகுதியிலும் (6 மாத கால அடகுக் கடன் சேவை) அடகுக் கடனைப் பெற்று உரிய காலத்தில் அவற்றை மீளச் செலுத்தத் தவறிய கடனாளிகளின் அடகு தங்கப் பொருள்களைத் தமிழீழ வைப்பகம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. எனவே, உரியவர்கள் 26.12.2005 ஆம் நாளுக்கு முன்னர் அடகு தங்கப் பொருள்களை மீட்டுக்கொள்ளுமாறு அல்லது புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மேலாளர்,**
ஆளுகைப் பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.
(சி/46736)(24-11-46)

# பஸ்ஸின் எரிபொருள் தாங்கி வெடித்து நாற்பது பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

## பாகிஸ்தானில் கோரம்

லாகூர்,டிசெ.13

பாகிஸ்தானின் லாகூர் நகரத்தில் பஸ் ஒன்றின் எரிபொருள் தாங்கி வெடித்துச் சிதறியதில் குறைந்தது 40 பேர் வரை உயிரிழந்தனர். மேலும் 10 பேர் படுகாயமடைந்தனர்.


பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள லாகூர் நகரத்தில் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு 50 பேர் திரும்பிக் கொண்டிருந்தபோது, பஸ்ஸின் பின்பகுதி ஜன்னல் ஊடாகச் சிறுவன் ஒருவன் பட்டாசைக் கொளுத்தி வீசியபோது அது தற்செயலாக பஸ்ஸின் எரிபொருள் தாங்கியின் மீது வீழ்ந்து வெடித்தது. இதனால் எரிபொருள் தாங்கி பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. தொடர்ந்து பஸ் பெரும் சுவாலையுடன் தீப்பிடித்து எரிந்தது.

இந்தத் தீ அனர்த்தத்தில் சிக்கி 40 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் 10பேர் பலத்த எரிகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாளேனார் பெண்களும், சிறுவர்களும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேரில் கண்டநபர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் சில வினாடிகளிலேயே எல்லாம் நடந்து முடிந்து விட்டது. பஸ்ஸினை தீ முழுமையாகச் சூழ்ந்து கொண்டதால் எம்மால் யாரையும் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது என்றார் அவர்.

உயிரிழந்தவர்களின் பெரும்பாலான உடல்கள் முற்றாகக் கருகியுள்ளமையால் அடையாளம் காணமுடிய வில்லை என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படும் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)



## பங்களாதேஷில் குண்டுவெடிப்பு

டாக்கா,டிசெ.31

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்றுமுன்தினம் அதிகாலை பாரிய குண்டு வெடித்தது. எனினும் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

முக்கிய அரச அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் விடுதலையான 34ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது. சுதந்திர தினக் கொண்டாட்டங்களைக் குழப்பும் பொருட்டு இந்தக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றொரு குண்டு வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக பங்களாதேஷில் குண்டு வெடிப்புகளும், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## ஹெலிகொப்டர் மூலம் சிறைக் கைதிகள் மீட்பு

### பிரான்ஸில் துணிகரச் சம்பவம்

பாரிஸ்,டிசெ.13

பிரான்ஸ் நாட்டின் ஐடோன் சிறையில் இருந்த மூன்று கைதிகள் ஹெலிகொப்டர் மூலம் மீட்டுச் செல்லப்பட்டுள்ளனர். இந்த துணிகரச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

பிரான்ஸ் ஆல்ப்ஸில் உள்ள ஆல்பர்ட்வில்லே நகரில் சிலரால் ஒரு மாதத்துக்கு முன்பே ஹெலிகொப்டர் வாடகைக்கு முன்பதிவு செய்யப்பட்டது. அந்த ஹெலிகொப்டர் ஆல்பர்ட்வில்லே நகரில் இருந்து புறப்படுவதற்கு ஒரு சில வினாடிகளுக்கு முன்பு அதில் ஏறிய 2 பேர், விமானியை மிரட்டி அதை ஐடோன் சிறைக்குக் கொண்டு செல்லுமாறு மிரட்டினர்.

இதையடுத்து, அடுத்த 15ஆவது நிமிடத்தில் சிறைக்குள் ஹெலிக்கொப்டர் தரையிறக்கப்பட்டது. அடுத்த 30 வினாடிகளுக்குள் அங்கிருந்த 3 விசாரணைக் கைதிகளை ஏற்றிக்கொண்டு அது கிளம்பிப் புறப்பட்ட இடத்திலேயே தரையிறங்கியது. விமானியின் தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்புக் கருவியை எடுத்துக் கொண்டு 5 பேரும் தப்பிச் சென்றனர்.

சிறைக் கைதிகள் தப்பிச் சென்றபோது சிறைக்காவலர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

சிறைக்காவலர்கள் ஹெலிகொப்டரை நோக்கி ஒரு முறைகூட சுடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. எந்தவித எதிர்ப்பும் இன்றி கைதிகள் தப்பிச் சென்றனர். இதே போன்ற சம்பவம் கடந்த ஜூலையில் கிழக்கு பிரான்ஸில் உள்ள ஒரு சிறையில் நடைபெற்றது. அப்போது சிறையின் மேல் தளத்தின் மீது ஹெலிக்கொப்டர் இறக்கப்பட்டது. அதையடுத்து, அபாய சங்கு ஒலித்தமையால் கைதிகள் தப்பிச் செல்வது தடுத்து நிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## உலகமயமாக்கல் அமைப்புக்கு எதிராக ஹொங்கொங்கில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஹொங்கொங், டிச.13

உலக வர்த்தக அமைப்புக்கு எதிராக ஹொங்கொங்கில் பெரும் எதிர்ப்புப் பேரணி இடம்பெற்றது. இதில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

உலக வர்த்தக அமைப்பின் மாநாடு ஹொங்கொங்கில் இன்று நடைபெறவுள்ளது. இந்த நிலையில் இந்த ஆர்பாட்டம் இடம்பெற்றுள்ளது. உலக மயமாதலை எதிர்த்து வண்ணமயமான பதாதைகள் பல இடங்களிலும் நிறுவப்பட்டிருந்தன. இதில் கலந்துகொண்டவர்களில் பலர் பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலிருந்தும் வந்திருந்தனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற வீதியெங்கும் பெருமளவு பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும், எதிர்ப்புப் பேரணி அமைதியாகவே நடைபெற்றது.

மாநாடு தொடங்கவுள்ள இன்றும், எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமையும் மேலதிக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என ஆர்ப்பாட்ட ஒருங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர். (க)

## இந்தியாவின் பெங்களூர் நகரம் 'பெங்களூரு' எனப் பெயர் மாற்றம்

பெங்களூர்,டிசெ.13

இந்தியாவின் முக்கிய நகரமான பெங்களூர் வெகு விரைவில் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது என கர்நாடக மாநில முதலமைச்சர் தரம்சிங் தெரிவித்துள்ளார். பெங்களூரு என அது பெயர் மாற்றப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் முக்கிய நகரங்களான மும்பை, சென்னை, கொல்கத்தா என்பனவும் அண்மைக் காலத்தில் பெயர் மாற்றத்திற்குள்ளானவையாகும்.

இந்த நிலையில் பெங்களூர் நகரத்தின் பெயரைக் கன்னடத்தில் அழைக்கும் வகையில் 'பெங்களூரு' என விரைவில் மாற்றம் செய்ய கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது.

## ஆசிய நாடுகள் அனைத்தும் ஒரே அமைப்பாக செயற்படவேண்டும்

### இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

கோலாலம்பூர்,டிசெ. 13

ஆசிய நாடுகள் அனைத்தும் ஒரே அமைப்பின் கீழ் செயற்படவேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு (ஆசியான்) மற்றும் கிழக்காசிய நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்ள நான்கு நாள் பயணமாக டெல்லியிலிருந்து புறப்பட்டார் மன்மோகன் சிங், விமானத்தில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில்,

தென்கிழக்கு மற்றும் கிழக்காசிய நாடுகள் மீது கவனம் செலுத்த வேண்டும் என்று இந்தியா 1992இல் ஆரம்பித்த முயற்சிக்கு இப்போது பலன் கிடைக்கத் தொடங்கியுள்ளது. தென்கொரியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் நமது வர்த்தக உறவுகள் கணிசமாக அதிகரித்து வருகின்றன.

தென்கொரியா, இந்தியாவில் மிகப்பெருமளவில் முதலீடு செய்துவருகிறது. தற்போது ஜப்பானின் முதலீடும் அதிகரித்து வருகிறது. இந்தோனேசியா, மியான்மார், மலேசியா ஆகிய நாடுகளுடன் நமது உறவு வலுப்பெற்று வருகிறது. இந்த நாடுகளுடன் உறவில் எந்த நெருடலும் இல்லை.

முதலீடுகளுக்காக நாம் மேற்கத்திய நாடுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அவசியம் இல்லை. தென்கிழக்கு ஆசியா மற்றும் கிழக்காசிய நாடுகளில் இன்னும் பயன் படுத்தக்கூடிய ஏராளமான வளங்கள் உள் ளன. பெரும் முதலீட்டை எதிர்பார்க்கும் நமக்கு இந்தப் பிராந்தியம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

அதனால், இந்த உச்சி மாநாடுகள் மிகவும் முக்கியமானவை. ஆசியான் நாடுகளின் தலைவர்களுடன் பேசும்போது, தடையற்ற வர்த்தக ஏற்பாடு குறித்துப் பேசுவேன். அதே போல், கிழக்காசிய நாடுகளுடன் பேசும் போது ஆசியப் பொருளாதார சமூகத்தை உருவாக்குவது குறித்தும், இந்த நாடுகள் இணைந்து செயற்படுவது குறித்தும் பேசுவேன். - என்றார் அவர். (க)

உலக அரங்கில்



லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நேற்று இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்தனர். காயமடைந்த ஒருவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

### இந்தியாவில் செயற்படும்

## தீவிரவாதக் குழுத் தலைவர் பங்களாதேஷில் கைது!

டாக்கா,டிசெ.13

இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் செயற்பட்டு வரும் தீவிரவாதக்குழுவின் தலைவர் நயன்பாஸி என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பங்களாதேஷ் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

பங்களாதேஷின் வடகிழக்கு எல்லை ஊடாக ஊடுருவ முயன்றபோது அவரைக் கைது செய்தோம் என பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தியாவில் செயல்பட்டு வரும் தீவிரவாதக் குழுவின் தலைவர் என்று தன்னை அவர் அறிமுகம் செய்து கொண்டார் என மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே பங்களாதேஷில் இருந்து வெளிவரும் 'அமர்தேசி' என்ற நாளிதழ் கைது செய்யப்பட்ட நயன்பாஸி, தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்தவர் எனச் செய்தி வெளியிட்டுள்ளது.(க)

# பாராட்டி வாழ்த்து



யா/ இடைக்குறிச்சி
ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை - மாணவி
பாலசுந்தரம் [illegible]
2005 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகளைப் பெற்று முதன்மை நிலையில் சித்தியடைந்துள்ளார். இம் மாணவி தியாகி அறக்கொடை புலமைப்பரிசில் நிதியினை யும் பெற்று கல்வியை மேற்கொண்டார். இவரை யா/ இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், தியாகி அறக்கொடை நிறுவனத்தினர் ஆகியோர் பாராட்டி வாழ்த்துகின்றனர்.

யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, வரணி.

(43932) (39.21.16.18)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
22 - 09 - 1922



ஆண்டவன் அடியில்
15 - 12 - 2002

**திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை**
**(தங்கம்மா)**

*திதி: 11-12-2005*

**அன்பின் திருவுருவே! பாசத்தின் ஒளிவிளக்கே!**
**அம்மா, ஆண்டுகள் மூன்று மறைந்தாலும் மாறிடுமா**
**உங்கள் பாசத்தின் நினைவுகள்.**

*எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

**ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

- குடும்பத்தினர்.

புலோலி தெற்கு, புலோலி

(21.16.19) (43924)

## ஒத்திவைப்பு

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என யாழ்.செயலக உதவித் திட்ட பணிப்பாளர் கே.குணாளசிங்கம் தெரிவித்தார்.


மேற்படி கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவிருந்தது. எனினும் குறிப்பிட்ட திகதியில் கூட்டம் நடைபெறமாட்டாது என்றும் - கூட்டம் நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-204-203)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கான ஒருநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. பதிவாளர் நாயகத்திணைக்கள அதிகாரிகளால் மேற்படி பயிற்சி பட்டறை நடத்தப்படவுள்ளதால் பிறப்பு, இறப்பு பதிவாளர்களை இதில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்டகாணிப் பதிவாளரும் மேலதிக மாவட்ட பதிவாளருமான ப. பிரபாகர் கேட்டுள்ளார். (எ-204-203)

# 11ஆம் ஆண்டில் நெஞ்சம் மறவாத நினைவுகள்

மலர்வு
27 - 11 - 1949



உதிர்வு
17 - 11 - 1994

## அமரர் சிவகுரு நவரத்தினம்

(உரிமையாளர், கனகா பத்திரிகை விற்பனை நிலையம், திருநெல்வேலி.)

திதி 13.12.2005

எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எப்படி உங்களை மறக்கலாம் அப்பா!
சித்தத்தில் என்றும் நிறைந்திருந்தீர்கள்
சிறப்பெலாம் தேடித் தந்தீர்கள்
நித்தமும் உங்களை நினைத்தே வாழ்கின்றோம்
நினைப்பதை யெல்லாம் முடித்து வைத்தீர்கள்
அத்தனின் பாதம் சேர்ந்தே வாழ்கின்றீர்கள்.
அப்பா! அப்பா ! என்றே அஞ்சலித்து நிற்கின்றோம்.

(C/46748)

தற்காலிக முகவரி:
60, பலாலி வீதி,
திருநெல்வேலி.

நிரந்தர முகவரி:
கனகா இல்லம்,
கைதடி கிடிக்கு, கைதடி.

குடும்பத்தினர்.

# இதயம் நெருடும் இரண்டாம் ஆண்டு சிரார்த்தம்



**மண்மகிழ்வு 05-02-1932**
**விண்மகிழ்வு 06-12-2003**

**திதி - கார்த்திகைத் திரயோதசி**

ஈரைந்து மாதம் எமைச் சுமந்தாய் அம்மா!
எழுவர் எமை இவ்வுலகினில் ஈந்தாய் அம்மா!
அன்பு எனும் பாலூட்டி அரவணைத்தாய் அம்மா!
பண்பு எனும் அமுதூட்டி வளர்த்தாய் அம்மா!
பாரினிலே அவர்களைப் பாங்குடனே வாழவைத்தாய்
கண்கண்ட தெய்வம் என்பாய் எங்கள் ஐயாவை
அவர் கதிகலங்கி நிற்[illegible]றார் இன்றும் உனது அன்பை நினைத்து!
அம்மம்மா, அப்பம்மா என ஏங்கும் பேரப்பிள்ளைகள்
பேதலிக்கின்றனர் உனது நிழற்படத்தை பார்த்து,
ஈராண்டென்ன எத்தனை காலமானாலும்
ஓயாது ஓயாது உன் நினைவு
மாறாது மாறாது உன் உருவம் எம்மனதை விட்டு
நாம் இந்த மண்ணிலிருக்கும் வரை
எம் இதயம் நெருடல்தானே அம்மா!

**என்றென்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டிநிற்கின்றோம்.**

(43931)(62)

## திருமதி கார்த்திகேசு சின்னமணி

**'செல்வி வளவு'**
**இமையாணன், உடுப்பிட்டி.**

**க.கார்த்திகேசு**
**குடும்பத்தினர்.**

## பொருளியற் கல்லூரி

யாழ்.கிளை நிறுவனம்
(இணுவில் மத்திய கல்லூரி அருகில்)

கே.கே.எஸ் றோட். இணுவில்.

புதிய வகுப்புகள்

**English Medium**
(ஆங்கில மொழி மூலம்)

தரம் 6,7,8,9 இப்பிரிவுகளுக்கு
ஆரம்பம் 14.12.2005 புதன் 3p.m
ஆங்கிலத்தில் அதிசிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் குழுவினால்

| விஞ்ஞானம்/சூழலியல் | ஆங்கிலம்/சமூகவியல் |
|---|---|
| திரு. பாலசுப்பிரமணியம் | திரு.இராஜகுலசூரியர் |
| கணிதம் | சுகாதாரம் |
| திரு. கோகுலநாத் | திரு.செந்தூர்ச்செல்வன் |

இங்கு ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கு மட்டும் தான் வகுப்புகள் நடைபெறும்.உங்கள் அனுமதியினை முன் கூட்டி பெற்றுக்கொள்ளவும். (............) (54-12-15)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் நீண்ட காலமாக ஆசிரியராகப் பணிபுரிந்து இளைப்பாறிய அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா( M.A) அவர்களின் மறைவால் எமது கல்லூரிச்சமூகம் ஆழ்ந்த அதிர்ச்சியும் துயரமும் அடைகின்றது. அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கல்லூரி சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர் ,ஆசிரியர்கள்.
யா /அருணோதயாக் கல்லூரி,
அளவெட்டி.

(43959)
(54-12-15)

## கண்ணீர் அஞ்சலி

யா/கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலையின் ஸ்தாபகரும்,
முன்னாள் அதிபருமாகிய

### மு. செல்லத்தம்பி

அவர்கள் காலமானதையிட்டு துயரடைகிறோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அமரருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கரவெட்டி கிழக்கு
அ.த.க. பாடசாலை.

(சி-46756)
(54-12-15)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## கண்ணீர்க் காணிக்கை



11.12.2005 இல் இறைவன் பாதம் அடைந்த எமது மதிப்புக்குரிய

### அருட்கவி வினாசித்தம்பி ஐயா


அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நாகவரத நாராயணர் பெருமானை வேண்டுகின்றோம்.

ஆர்.கேதீஸ்வரன், ஆர்.ஞானசம்பந்தன்
தெ.உதயசங்கர், ம.சிவமூர்த்தி, எம்.பி.பாலகிருஸ்ணன்.
(அளவெட்டி கலைஞர்கள்)

(43960
(54-12-15)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பராசத்தியம்மா பேரம்பலம்



மட்டுவில் பன்றித்தலச்சி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவில் அறவொளி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட பேரம்பலம் பராசத்தியம்மா அவர்கள் நேற்று (12.12.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா-வள்ளிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற பேரம்பலத்தின் மனைவியும் பாஸ்கரன் (பிரான்ஸ்) பேரின்பராணி, பத்மாவதி (நோயாளர் நலன்புரிச் சங்கம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.12.2005) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அறவொளி ஒழுங்கை,
கைதடி.

(சி-46756)
(54-15-12)

தகவல்:
மகள் - பத்மாவதி
0779231942

### கந்தர் பரமு

குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த கந்தர் பரமு 11.12.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் ரோகினியின் (பவானி) அன்புக் கணவரும் டாக்டர் புஸ்பரட்ணம் (யாழ். பல்கலைக்கழகம்), இரட்ணேசன் (நோர்வே), குகணேசன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), திருமதி புஸ்பராணி, திருமதி அருந்திராதேவி (சித்திரா), திருமதி காஞ்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும் பொ.பரமநாதன், வே.சிவசுப்பிரமணியம் (யாழ். பல்கலைக்கழகம்), அ.தனீஸ்வரன் (யாழ். பல்கலைக்கழகம்), திருமதி பு.நளினி (ஆசிரியர், சன்மார்க்க மகா வித்தியாலயம்), திருமதி இ.வதனி, திருமதி கு.யுவரோகிணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2005) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-46757)
(54-15-12)

தகவல்:
டாக்டர் ப.புஸ்பரட்ணம்.


## பிரத்தியேக, குழு வகுப்புகள்

**Grade 10, G.C.E. O/L**
விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்
ஆசிரியர் - S.Vinothan
ஆரம்பம் : 15.12.2005 பி.ப. 2 மணி (பு.நே)
(நேர சூசி அன்று வழங்கப்படும்)

* காலை,மாலை இரு பிரிவுகளாக
* இலகுவான பாடக் குறிப்புகள்
* தற்கால வினாத்தாள் மாதிரி

தொடர்பு:-
* **New Sakthy** Kalviyankadu.
* **Keen College** Thirunelvely.

ஆசிரியருடன்..
விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
(சந்திரசேரகப்)
பிள்ளையார்
கோயிலருகில்)
T.P. 077 6983225



## தேவை

யாழ். குடாநாட்டில் பிரபலம் வாய்ந்த பாலர் பாடசாலை ஒன்றிற்கு ஆங்கில மொழிமூலமும், தமிழிலும் கற்பிக்கக்கூடிய தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் உடனடியாகத் தேவை. ஆவணங்களுடன் சனிக்கிழமைக்கு முன்னதாக நேரில் வரவும்.

(43951)
(54-12-15)

140, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 5796



## BARATHY - சித்தன்கேணி

### தரம் 5 முதல் 11 வரை

புதிய வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. எமது தனித்துவமும் அதி திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்.

* மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளதால் இன்னும் சொற்ப மாணவர்களுக்குமட்டுமே அனுமதி வழங்கப் படும்.
* தரம் 9,10,11 இவ்வகுப்புக்கு 20 பேருக்கும்
* தரம் 5,6,7,8 இவ்வகுப்புகளுக்கு 15 பேருக்கும் மட்டும்தான் புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
* இதுவரை அனுமதி பெறாத மாணவர்கள் உங்கள்அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.

(43966)
(54-12-15)



## புதிய DVD வெளியீடு

தவமாய்தவமிருந்து, A B C D,
தொட்டி ஜெயா, சாணக்கியா,
ஒரு கல்லூரியின் கதை.
இடைக் காலப்படங்கள்
புதிய ஆங்கில DVD

**FLASH CD HOUSE**
64, மணிக்கூட்டு வீதி,
(பொலீஸ் நிலைய வீதி)
யாழ்ப்பாணம்.

(43957) (54-15-12)



## ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், நமீதா, வடிவேல்
நடித்த
**பம்பர கண்ணாலே**
காட்சிநேரம்: பு.நே.
10.30, 2.30, 6.30 மட்டும்

(46404)



## நாதன்ஸ் யாழ்ப்பாணம்




பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க
தற்காலிக புதிய நேரமாற்றம்
10.30, 1.30,4.30, இரவு 7.30
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஷாம்,சினேகா அபர்ணா நடித்த



## மனோகரா யாழ்ப்பாணம்



7ஆவது வெற்றி வாரமாக இளைய தளபதி விஜய்,அசின்,பிரகாஷ்ராஜ் நடித்த
**சிவகாசி**
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.ந)
9ஆம் திகதி முதல்
காலை 10.30 காட்சியாக சிவகாசி
1.30,4.30,7.30,10.30 காட்சியாக சூரியா, திரிஷா வடிவேல் நடித்த
**ஆறு**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
9 ஆம் திகதி முதல் புதிய நேரப்படி புதிய காட்சி நேரம் காலை 10.30, மதியம் 1.30, மாலை 4.30, இரவு7.30,10.30



## நாகம்ஸ் சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
அர்ஜூன், நமிதா,
வடிவேல் நடித்த
**ஆணை**
தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00


## மரண அறிவித்தல்கள்

### மா. ஞான சேவியர்



(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யா/புனித மரியாள் வித்தியாலயம், கௌரவ செயலாளர் - ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம், அன்பிய ஊக்குவிப்பாளர்)

மன்னாரைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமான மா. ஞான சேவியர் அவர்கள் (12.12.2005) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேல் பிள்ளை-அல்பிறட்அம்மா தம்பதியரின் அ[illegible] மகனும் அச்சு வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேதந[illegible]கம் - மேரிபுஷ்பம் தம்பதியரின் மருமகனும் றோஸ்மேரியின் அன்புக்கணவரும் மறைவாணன், (பிரதம தபாலகம்-யாழ்ப்பாணம்), ஆன்கல[illegible]வாணி (கனடா), மேரிஆன் செல்வலதா (சிலிங்கோ இன்சூரன்ஸ் -வவு[illegible]) பிளசிடா குமுதினி (மனித உரிமைகள் ஆணைக்குழு -யாழ்ப் பாணம்), மற்றும் கார்மெல்தீபன் (UNDP-யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபோதினி, தவேந்திரன் (கனடா), மற்றும் செந்தில்ரூபன் (Micro Computer System-Vavuniya), ஆகியோரின் அன்பு மாமனாரும், தேவதாசன் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்-கச்சேரி மட்டக்களப்பு), அருட்சகோதரி மேரி ஆன் (திருக்குடும்ப கன்னியர் மடம் -மன்னார்), மற்றும் மேரிஸ்ரெலா ஆகியோரின் அன்புச்சகோதரரும் சுதர்சன், சோபியா, நடாஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லுடல் இன்று (13.12.2005) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

130, 4ம், குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
0773604100, 0776273299

(43956)
(54-15-12)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி விக்ரோறியா இம்மனுவேல் (மலர்)



பழைய வாய்க்கால், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் தவசிக்குளம், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்ரோறியா இம்மனுவேல் நேற்று (12.12.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்தலோமை-றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற டேவிற்இம்மனுவேலின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, றிச்சேட் (சுவிஸ்), ஞானசீலன் (ரெலிகொம்), திருநேசன் (அஞ்சலகம் -மிருசுவில்), யோகநாதன் (அஞ்சலகம் -கொடிகாமம்), றாகினி (கனடா), காலஞ்சென்ற குணசீலன் மற்றும் றவிந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியன் (இளைப்பாறிய அஞ்சலதிபர் -மிருசுவில்), யசிந்தா (சுவிஸ்), பரமேஸ்வரி, (நாவற்குழி), மேரி சறோஜா, செல்லறஞ்சினி (கரவெட்டி), ராஜேஸ் (இந்தியா), இந்திரகுமார் (அஞ்சலகம்-மிருசுவில்), ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான யோசேப் அருட்சகோதரி மேரி பற்றிசியா (இளவாலை) மற்றும் மேரி மாக்கிறட் ஆகியோரின் சகோதரியும் புஸ்பராணி (இளைப்பாறிய அதிபர்), செல்வரட்ணம் (இளைப்பாறிய அஞ்சலக ஊழியர் கிளிநொச்சி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.12.2005) செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவசிகுளம்
மிருசுவில்.
0779037159

(43953)
(54-15-12)

தகவல்:
டே.யோகநாதன்,
டே.திருநேசன்.

### நமசிவாயம் சிவப்பிரகாசம்



உடுவில் லவ்லேனைச் சேர்ந்த நமசிவாயம் சிவப்பிரகாசம் நேற்று (12.12.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம்-தில்லைமுத்து தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற கமலாம்பிகையின் கணவரும் காலஞ்சென்ற தனலக்சுமியின் சகோதரரும் கேதார கௌரியின் தந்தையும் அமரர் பஞ்சலிங்கத்தின் மாமனாரும் ரமணன் (கனடா), அகிலா (கனடா), உத்தமி, குந்தவி (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேரனும் ராகுல், நிவேதா, லாவண்யா ஆகியோரின் பூட்டனும் குமாரதாசன், காலஞ்சென்ற சுகிர்தரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கௌரி இல்லம்,
லவ்லேன், உடுவில்.

(43961)
(54-15-12)

தகவல்:
மகள்.

### மாணிக்கம் திரேசம்மா

றக்கா வீதியைச் சேர்ந்த மாணிக்கம் திரேசம்மா அவர்கள் காலமானார்.

அன்னார் அருணாச்சலம்-எலிசபெத் தம்பதியரின் அன்பு மகளும் மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியும் அமரர் அகஸ்ரின் -யோபு, அமரர் மேரி மாகிரற், றீற்றா, எக்மன் (அரசு), ஜோன்பிள்ளை (பேட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேரி ஜெயம்மாவின் அன்புத் தாயாரும் அமரர் பெர்னாண்டோவின் அன்பு மாமியாரும் சுஜாந்தினி, சாமினி, ஜெராட், சுஜிதரன், சாளினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.12.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 4/1, றக்கா லேன்,
யாழ்ப்பாணம்.

(43963)
(54-15-12)

தகவல்:
விமலா (மகள்).

## நோர்வேயின் பணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யுத்தநிறுத்த உடன்பாடு குறித்து ஜப்பானில் இலங்கை அரசும், புலிகளும் சந்தித்துப் பேசலாம் என்று தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனை குறித்து விடுதலைப் புலிகளின் உயர்மட்டத்தில் கேட்டோம். அப்போது தெரிவிக்கப்பட்டதாவது:-

அமைதி நிலைமையை - சமாதான சூழலை - பேணுவதற்கு யுத்தநிறுத்த உடன்பாடு முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை நாமே தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறோம். இணக்கம் காணப்பட்ட விடயங்களை முழு அளவில் நடைமுறைப்படுத்தினால் பெரும்பாலான சிக்கல்கள் தீர்ந்துவிடும் என்பதைச் சுட்டிக்காட்டி வருகிறோம். அது குறித்து நாம் பேசத் தயார்.

ஆனால், எந்தப் பேச்சும் அமைதி முயற்சிகளுக்கான அனுசரணையாளர்களின் பங்களிப்புடன்தான் நடைபெறவேண்டும். அனுசரணைப் பணியை நோர்வே தொடராவிட்டால் அத்தகைய பேச்சுகளுக்கு இடமேயில்லை.

எனவே, இது விடயத்தில் முதலில் நோர்வேத் தரப்பின் தீர்க்கமான - திட்டவட்டமான - முடிவு அவசியம். நோர்வே எதிர்பார்க்கும் விடயங்களை நிறைவு செய்ய இலங்கை அரசுத் தரப்புத் தயாரானால்தான் அனுசரணைப் பணியை மீள ஆரம்பிக்க நோர்வே இணங்கும்.

இவ்விடயத்தில் நோர்வேயைத் திருப்திப்படுத்தக்கூடிய விதத்தில் எமது பதிலை அளித்துவிட்டோம்.

இப்போது இலங்கை நிலைமை, சமாதான முயற்சிகளின் புலாபலன்கள், எதிர்காலப் போக்கு, அதனால் விளையக்கூடிய பலன்கள் ஆகியவை குறித்து ஒஸ்லோவில் ஆராயப்படுகின்றது.

அங்கு ஒரு முடிவு எட்டப்பட முன்னர் எந்தத் தீர்மானத்தையும் நாம் எடுக்கமுடியாது. நோர்வே அனுசரணைப் பங்களிப்பை வழங்காத நிலையில் எந்தப் பேச்சுக்கும் நாங்கள் போகமாட்டோம்.

நோர்வே அனுசரணைப் பணியைத் தொடர முடிவு செய்து அதனடிப்படையில் நாங்கள் பேச்சுக்குப் போகும் நிலைமை ஏற்பட்டால் கூட, யுத்தநிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவது குறித்துப் பேசவே இணங்குவோம். அந்த உடன்பாட்டைத் திருத்துவது குறித்து பேசுவதற்கு இடமேயில்லை - இப்படி அந்த உயர்மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## கறுவாக்கேணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

சுந்தர் விதுசன் என்ற சிறுவனே இச்சம்பவத்தில் படுகாயமடைந்து வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான்.

கறுவாக்கேணி வீதியில் எதிர்பாராத விதமாக சந்தித்துக்கொண்ட இரண்டு இனம் தெரியாத ஆயுதக்குழுவினர் தமக்கிடையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கைக்குண்டையும் வீசியுள்ளனர். இதன்போது அருகில் உள்ள வீட்டில் இருந்த சிறுவனே காயமடைந்துள்ளான்.

இச்சம்பம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர். (க-3)

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரைக் கடத்திச்செல்லப் பயன்பட்டதாகக் கூறப்படும் வான் நேற்று மதியம் 1.30 மணியளவில் வவுனியா கிடாச்சூரி என்ற இடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வானில் சென்ற மூவரையும் தாங்கள் கைதுசெய்திருக்கிறார்கள் என்றும் அவர்களிடம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளார்கள் என்றும் வவுனியாப் பொலீஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.சி.அபயசிங்க பண்டார தெரிவித்துள்ளார். (க-3-164)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை முன்வைக்கக் கூடாதென்றும் தெரிவித்தார்.

அமைதி முயற்சிகளைக் கையாளும் விடயத்தில் இலங்கை அரசுக்கும், புலிகள் இயக்கத்திற்கும் தாங்கள் நிபந்தனைகளை முன்வைக்கப்போகிறார்கள் என நோர்வே அனுசரணையாளர்கள் முன்னதாகத் தெரிவித்திருந்தனர்.

இதுபற்றிக் கேட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேனவிஜேசிங்க.

தாமாகவே விரும்பி அனுசரணைப் பணியில் ஈடுபடும் நோர்வே பக்கச்சார்பற்ற வகையில் செயல்பட வேண்டும். அப்படியில்லாமல் அரசாங்கம் ஒன்றுக்கு அவர்கள் நிபந்தனைகளை முன்வைப்பது ஏற்கமுடியாத ஒன்று - இப்படி அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (க-3)

## தலைநகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி சந்தி, விபேட்டி சுற்றுவட்டம், ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, மார்க்கஸ் பெர்னாண்டோ வீதி, தர்மபால மாவத்தை, பௌத்தலோக்கா மாவத்தை, கிறீன்பார்க் வீதி, லோட்டஸ் பிளேஸ், சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா மாவத்தை, சுதந்திர சதுக்கம், றீட் மாவத்தை, விஜயராமா மாவத்தை, டுப்பிளிக்கேசன் வீதி ஆகிய வீதிகளே தற்காலிகமாக மூடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## துப்பாக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் காரணமாக அருகில் உள்ள பாடசாலைகளில் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவர்கள் பெரும் குழப்பத்திற்குள்ளானார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-3-7-86-203)

## முன்நிபந்தனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருக்கிறது எனக் கூறப்படுகிறது. சுமார் இரு மணிநேரம் நடைபெற்ற இந்தப் பேச்சில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பலிஹக்கார, அரசு சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜோன் குணரட்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுகளின் விவரத்தை இந்தச் சந்திப்பின்போது நோர்வேத் தூதுவர் அரசுத் தரப்புக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்.

அதேவேளை, அமைதிப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்காக நோர்வே முன்வைத்திருக்கும் நிபந்தனைகள் தொடர்பிலான ஜனாதிபதியின் அதிருப்தி நேற்றைய சந்திப்பின்போது ஜனாதிபதியின் செயலாளரால் நோர்வேத் தூதுவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அனுசரணையாளராகச் செயல்படும் நோர்வே இவ்வாறான நிபந்தனைகளை அரசுக்கு விதிக்க முடியாதெனச் சுட்டிக்காட்டியிருக்கும் இலங்கை அரச தரப்பினர் இதனை நோர்வே அரசுக்கு அறிவிக்குமாறும் கேட்டுக்கொண்டனர் எனக் கூறப்படுகிறது. (க-3)

## வாழைச்சேனையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரே இச்சம்பவத்தில் காயமடைந்து வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத வாலிபர் ஒருவர் இராணுவத்தினர் மீது கைக்குண்டொன்றை வீசிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். இச்சம்பவத்தின்போது இராணுவத்தினர் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இராணுவத்தினரும் பதில் தாக்குதலை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் இராணுத்தினர் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள மூன்றாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். (க-3)

## டக்ளஸ், அதாவுல்லாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமே அவர்களாவர்.

இவர்கள் புலிகளிடம் சரணடைந்ததால் சீற்றமுற்ற கருணா குழுவினர் புகழ்வேந்தனின் சகோதரிகளான இரு இளம் குடும்பப் பெண்களை அவர்களது வீடு புகுந்து சுட்டுக் கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் புகழ்வேந்தனும், ஞானதீபனும் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

கருணா குழு திறமையாகச் செயற்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டுவரும் என்று நம்பியே அதில் இணைந்து செயற்பட்டோம்.

ஆனால், தமிழ், முஸ்லிம் மக்களைக் கொன்று, அழிவு வேலைகளைச் செய்து, இனக்குரோதத்தை மூட்டி அக்குழு செய்துவந்த நாசவேலைகள் பிடிக்காததால் அதிலிருந்து நாம் வெளியேறிவிடத் தீர்மானித்தோம். அதன்படி செய்தோம்.

இனியபாரதியே கருணாவின் முக்கிய ஆளாகச் செயற்பட்டார். ஆயுதம் வைத்திருந்தமை தொடர்பாக இவரோடு கைது செய்யப்பட்டவர் பௌஸர் என்ற முஸ்லிம். இந்த பௌஸர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். அமைச்சர் அதாவுல்லாவின் கையாளர் இவரே. இந்த நபர் மூலமே அமைச்சர் அதாவுல்லாவுடன் கருணா குழுவினருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அமைச்சர் அதாவுல்லாவின் விருப்பத்துக்கு இசைவான நடவடிக்கைகள்பௌஸர் மூலம் எம்மால் மேற்கொள்ளப்பட்டன.

அமைச்சர் அதாவுல்லாவுடன் இனியபாரதிக்கு நல்ல தொடர்பு இருந்தது.

அக்கரைப்பற்று பெரியபள்ளி வாசலின் மீதான கைக்குண்டுத் தாக்குதல்களை கருணா குழுவினர்தான் செய்தார்களா என்பது எமக்குத் தெரியாது. ஆனால், அந்தச் சம்பவம் நடந்த வேளையில் இனியபாரதி, புலித்தேவன், சுரேஷ், சந்திரமோகன் ஆகியோர் எம்முடன் முகாமில் இருக்கவில்லை. அச்சமயம் அவர்கள் வெளியே போயிருந்துவிட்டு பின்னர் முகாம் திரும்பினர்.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் நேரடிச் சண்டை வெடிக்காவிட்டால் நாம் வெளிப்படையாக இயங்க முடியாது என்றும் -

அதனால் அத்தகைய நிலையில் துணைப் படையாக நாம் இயங்குவதற்கு யுத்தநிறுத்த உடன்பாடு இடம்தராது என்றும் -

எனவே எப்படியாவது யுத்தம் ஏற்படச் செய்யவேண்டும் என்றும் -

அதற்காக இனங்களுக்கிடையில் குழப்பங்களை ஏற்படுத்தி, பதற்றத்தை உருவாக்கி, சண்டையை வெடிக்க வைப்பது தவிர்க்க முடியாமல் செய்ய வேண்டிய வேலை என்றும் -

அம்மான் (கருணா) தொலைபேசி மூலம் வழிப்படுத்தல் கூறுவதாகவும் இனியபாரதி எமக்குத் தெரிவித்து வந்தார்.

கருணா அம்மான் இந்தியாவிலிருந்தே செயற்பட்டு வருகிறார். அவர் அங்கிருந்தே தொலைபேசி மூலம் தினசரி பணிப்புகளை இனியபாரதி, மங்களம் மாஸ்டர் போன்றோருக்கு வழங்கி வருகிறார்.

அம்பாறை மாவட்டம் மாந்தோட்டம் பகுதியில் கடந்த 22ஆம் திகதிக்குப் பிறகு முகாம் அமைத்துத் தங்கினோம்.

அங்கு நாம் முகாம் அமைத்ததும் அங்குள்ள மக்கள் எமக்கு எதிராகக் குரல் எழுப்பினர். நாங்கள் அங்கிருந்து போகாவிட்டால் தங்களுக்கும் ஆபத்து என்று அவர்கள் குழப்பம் செய்தனர். ஆனால் பக்கத்தில் உள்ள விஹாரையின் பிக்குவும், விசேட அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரியும் வந்து எங்களுக்காகஅந்தப் பகுதி மக்களிடம்பேசினர். புலிகளை வெல்வதற்கு இக்குழுவினரின் உதவி தேவை என்றும் இவர்கள் தங்களின் ஆட்கள் என்றும் அந்த இருவரும் ஊர் மக்களிடம் கூறியதால் அவர்கள் அதைக் கேட்டு அடங்கினர்.

இனியபாரதிக்கு அமைச்சர் டக்ளஸோடு நெருங்கிய தொடர்பு உண்டு. தினசரி காலையில் தொலைபேசி மூலம் டக்ளஸுடன் அவர் பேசுவார். ஆயுதங்களுடன் பிடிபட்டு சிறையில் இருந்த தம்மை டக்ளஸ் தலையிட்டு விடுவித்தார் என இனியபாரதி கூறுவார்.

தமக்கு டக்ளஸ் ஒரு கொம்பியூட்டரைப் பரிசாக அளித்திருப்பதாகக்கூறி அதைப் பயன்படுத்தி வந்தார் பாரதி.

டக்ளஸை வாழ்க்கை முழுவதும் மறக்காமல் அவருக்கு நாங்கள் அனைவரும் நன்றியுடன் இருக்க வேண்டும் என்றும் இனிய பாரதி அடிக்கடி கூறுவார்.

தேர்தல் சமயத்தில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தீவுச்சேனைக்கு வந்து எங்களைச் சந்தித்தார்.

எப்படியாவது மஹிந்தராஜபக்ஷவுக்காக உழைத்து அவரைத் தேர்தலில் வெற்றி பெற வைத்தால் தங்களால் இயன்ற அனைத்து உதவிகளையும் தாங்கள் எங்களுக்குச் செய்வார் என்று அவர் உறுதியளித்தார்.

பத்தாயிரம் வாக்குகளையாவது அப்பிரதேசத் தமிழ் மக்களிடமிருந்து திரட்டித் தருமாறு அவர் மங்களம் மாஸ்டரைக் கேட்டார்.

அதனை அடுத்தே பிள்ளையான், கொழும்பில் இருந்து மஹிந்தவுக்காக 'நோட்டீஸ்' அடித்து அனுப்பி வைத்தார். நாம் அதனைப் பகுதியில் போட்டோம்.

இனியபாரதி சாகும்வரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துச் செயற்பட்டார். - இப்படி அவர்கள் கூறினர். (க-3)

## வந்தாறுமூலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றுள்ளனர்.

காலை 7.30 மணியளவில் வந்தாறுமூலை இராணுவ முகாமிலிருந்து இப்பிரதேசத்தின் வீதிவழியாகப் பாது காப்புக் கடமையின் நிமித்தம் ரோந்து சென்ற இராணுவத்தினரை இலக்குவைத்தே இத்தாக் குதல் நடத்தப்பட்டிருப்பதாகப் பொலீஸார் கூறினர்.

காயமடைந்த இராணுவச் சிப்பாய்கள் உடனடி சிகிச்சையின் பொருட்டு பொலன்னறுவை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து நேற்றுக்காலை 7.30 மணியின்பின் தடைப்பட்டி ருந்த மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான பாதையின் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் மூன்று மணி நேரத்தின்பின் முற்பகல் 10.30 மணியளவில் மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பின. (க-3)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தன. இத்தேடுதலின்போது நான்கு தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு ஏறாவூர் பொலீஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது மரம் ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோர் கண்ணி ஒன்றைத் தாம் மரத்திலிருந்தவாறு வெட்டி மீட்டெடுத்திருப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (க-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பிமுத்து முத்து

சரசாலை வடக்கைச் சேர்ந்த திருமதி தம்பிமுத்து முத்து அவர்கள் நேற்று (12.12.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகேந்திரா, சந்திரலீலா (ஆசிரியை - ஸ்ரீ கணேச வித்தியாலயம், சரசாலை), இந்திரலீலா ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி நல்லபிள்ளை, கனகர், செல்வி பொன்னம்மா (ஓய்வுபெற்ற உப அதிபர், மந்துவில் றோ.க.பாடசாலை), செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2005) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.* (சி/46759)(33-13-46)

தகவல்:
இ.சந்திரலீலா (மகள்)

## முருகேசு தங்கம்மா

நவாலி வடக்கைச் சேர்ந்த அமரர் முருகேசு அவர்களின் அன்பு மனைவி தங்கம்மா அவர்கள் நேற்று (12.12.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரகிரி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*
(43967)(33-13-46)

தகவல்:
மு.கங்கேஸ்வரன் (மகன்-ஜேர்மனி),
கௌரி வதனவாசன் (மகள் - ஆசிரியை, மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை)

## மயில்வாகனம் வேலாயுதம்

சாவகச்சேரி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், களுபோவிலை, தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் வேலாயுதம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) அவர்கள் நேற்று (12.12.2005) திங்கட்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோமளராணியின் அன்புக்கணவரும், சுமதி, ஸ்கந்தசிவம், குருபரன், சிவகுமார், கோமதி(சென் மேரிஸ் த.ம.வித்தியாலயம், பம்பலப்பிட்டி)ஆகியோரின் அன்புத்தந்தையும், குகப்பிரகாசம், ஜெரின், வதனகுமாரி, யசோதரா, சத்தியகுமார் ஆகியோரின் மாமனாரும் லோகிதா, சரண்யன், லக்ஷிதா, ஜொனத்நிவேதன், ஜெருஷாந்த், விதுரா, கேமளா, கணன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் களுபோவில ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (13.12.2005) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (14.12.2005)புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியைகளின் பின்னர் கொகுவல மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*187/21, ஜெயசமதி மாவத்தை,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*களுபோவிலை, தெகிவளை.*
*T.P. 0112764901*

தகவல்:
சுமதி (மகள்)
(சி/46785)(33-13-46)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.